விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 24 வெள்ளிக்கிழமை (08.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 20

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

# ஜனநாயகத்தை மீளக்கட்டியெழுப்பி சமாதானம் முறையாகப் பேணப்படும்

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத்தை மீளக்கட்டியெழுப்பி சமாதானம் முறையாகப் பேணப்படும் என ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். பத்து அம்சங்களுடன் அவர் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை காலமானார்



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை வேங்கடம் வேலுப்பிள்ளை (வயது-86) நேற்று இயற்கை எய்தினார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்த அவர் பனாகொடை முகாமில் இருந்தபோது நேற்று முன்தினம் மரணமானார்.

இது தொடர்பில் இராணுவப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## 12,13 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பு எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் இடம்பெறும் என யாழ்.தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.தேர்தல் திணைக்களத்திற்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தவர்களில் 4 ஆயிரத்து 737 பேருக்குரிய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு கடந்த 4 ஆம் திகதி முதல் வாக்காளர் அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டம், ஒழுங்கைச் சீர்குலைப்போரை உடனடியாகக் கைது செய்ய உத்தரவு

### மல்லாகம் நீதிவான் அதிரடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வீதிகளில், சந்திகளில் தேவையற்றுக் கூடி நின்று குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள், பொலிஸ் அதிகாரிகளிடையே இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றம் ஆனாது பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இடம். நீதிமன்றம் ஒழுங்காகக் (15 ஆம் பக்கம் பார்க்க)

## பண்ணை வீதி புனரமைப்பு அடுத்த வாரம் ஆரம்பம்!

### ★ யாழ்.அரச அதிபர் தகவல் ★

(யாழ்ப்பாணம்)

யாழ்.-தீவகம் பிரதான வீதியான பண்ணை வீதியின் முதல் ஒரு கிலோமீற்றர் பகுதியின் திருத்த வேலைகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என யாழ்.அரச அதிபர் க. கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதற்கான சகல ஒழுங்குகளும் ஒப்பந்தகாரருக்குச் செய்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறையில் உண்ணாவிரதமிருந்த மூன்று கைதிகள் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

தம்மை விடுதலை செய்யக் கோரி யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதிகள் மூவர் மயக்கமுற்ற நிலையில் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 25 அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் மூவர் நேற்று மயக்க முற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச் (16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மேயர் பொன்சேகாவுக்கு ஆதரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர சபையின் மேயர் சிவகீதா பிரபாகரன் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் பொன்சேகாவுக்கு ஆதரவளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முன்னர் பிள்ளையான் குழுவில் அங்கம் வகித்த மட்டக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் வழித்துணையின்றி ஏ-9 ஊடாகப் பயணிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடாக சேவையில் ஈடுபடும் பேருந்து வண்டிகள் இராணுவத்தின் வழித்துணையின்றி சுதந்திரமாக பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் க.கணேஷ், படையதிகாரிகளிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் பயணிகளை ஏற்றிக் கொண்டு முற்றவெளிக்குச் சென்று அங்கிருந்து இராணுவத்தின் வழித்துணையுடனேயே வெளிமாவட்டங்களுக்கான தமது பிரயாணத்தை நேற்று முன்தினம் வரையில் மேற் (16 ஆம் பக்கம் பார்க்க)

டெங்கு பற்றி அறிவோம்

நோய்க் காரணி - டெங்கு வைரஸ்



பரப்பும் நுளம்புகள்- ஏடிஸ் இஜிப்ரி
(Aedes aegypti)
ஏடிஸ் எல்போபிக்டஸ்
(Aedes albopictus)



இந்த நுளம்புகள் பகல் வேளைகளிலேயே மனிதரைக் கடிக்கும் பழக்கம் உடையவை
பெரும்பாலும் காலை 6.00-9.00, மாலை 3.00-6.00)
-வலம்புரி

## மகேஸ்வரன் மணிமண்டப திறப்புவிழாவும் நூல் வெளியீட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் கொழும்பு மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானதி.மகேஸ்வரனின்நினைவாக யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி கோவில் வடக்கு வீதியில் மகேஸ்வரன் மணி மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்னாரது பிறந்த தினமான எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு இந்த மண்டபம் சிவஸ்ரீ.சம்பு மகேஸ்வரன் குருக்களினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த திறப்பு விழாவின் போது ஈழத்து சிதம்பரத் திருத்தலயாத்திரை, முருகப்பெருமான் தோத்திர மாலை ஆகிய இரு நூல்களும் வெளியிடப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் ஆய்வுரைகளை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி ம.வேதநாதன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

திறப்பு விழாவினையடுத்து திருமதி வசந்தா வைத்தியநாதனின் பேருரையும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

மகேஸ்வரன் எம்.பியின் ஞாபகார்த்தமாக கடந்த முதலாம் திகதி செல்வச்சந்நிதி ஆலயத்தில் மண்டபமொன்றும் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ச-5)

## சமூகவியல் கற்கை நெறிசார் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை 10.00-12.00மணி வரை சமூகவியல் கற்கை நெறிசார் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூகவி யல்துறையின் தலைவர் கலாநிதி ஏ.எஸ்.சந்திரபோஸ் கருத்துரை வழங்கவுள்ளார்.

இக் கருத்தரங்கிற்கு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். இக் கருத்தரங்கு இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் 30வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இ


## நேர்முகத்தேர்வு

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திற்கு சட்டத்துறை மற்றும் முகாமைத்துவ கற்கைகள் துறைகளிற்கு பகுதி நேரமாக கடமையாற்ற துறைசார் ஆலோசகர்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வுநாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் எனவும் தகுதியானவர்கள் இதுவரை விண்ணப்பிக்கத் தவறியிருப்பின் தமது சுயவிபரக்கோவையுடன் மேற்குறிப்பிட்ட திகதியில் நேர்முகத்தேர்வுக்கு சமூகமளிக்கலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## மரண அறிவித்தல்

### அமரர் சிவசம்பு கனகரத்தினம்

(யாழ். டீசல் மெக்கானிக் உரிமையாளர்)



21/1 ஓட்டுமட வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு கனகரத்தினம் அவர்கள் நேற்று வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும், காலஞ்சென்ற செல்லத்துரை அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், பூமணி அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், மகேஸ்வரி, மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும் பாக்கியம், துரைராஜசிங்கம், குதூகலகுமாரி, தூரைசிங்கம் (டென்மார்க்), நிர்மலகுமாரி, வசந்தகுமாரி (சுவிஸ்), பிரபாகரன்(பிரான்ஸ்), பாஸ்கரன், ரஜனி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் மங்களேஸ்வரி, நாதன் (துர்க்கா கடைச்சல் தொழிலகம்), காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் யோகராஜா, ரஞ்சிதவதனி, செந்தில்குமார் ஆகியோரின் மாமனும், குமுதினி, சுபாஸ்கரன், ஜெயந்தி, கஜன், ஜனுஜா, ரிஷாலினி, சிந்துயா, தர்சலா, பகீரன், டினேஸ், கிஷோக்குமார், கேசகுமார், உஷானி, பூவாஸ், லீசா, நோவாஸ், விதுரா, பிரான்சிகா, தனுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.01.2010 இன்று பி.ப.3.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21/1 ஓட்டுமட வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

(322)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி பிரபா-சிவகுமார்
அவர்களின் அன்புத்தாயார்

### கௌரிபாலன்-பத்மாவதி



அவர்களின் திடீர் மறைவு குறித்து வேதனை உற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்
ஏழாலை

(C-4162)

## மணமகள் தேவை

பிரான்சில் குடியுரிமையுடன் தொழில் புரியும் Non.R.C கிறிஸ்தவ மதம் நாடார் இனத்தைச் சேர்ந்த 37 வயதுடைய தமது மகனுக்குப் பெற்றோர் படித்த நற்குணமுள்ள கிறிஸ்தவ மணமகளைத் தேடுகின்றனர்.

தொடர்பு:-222 5298
(321) யாழ்ப்பாணம்

## சமையல் ஆள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ரெஸ்ட்ரோறன்ற் (Restaurant) க்கு அனுபவமுள்ள சமையல் ஆள் தேவை.தங்குமிட வசதி செய்து தரப்படும்.சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:-
(318) 077 5939816

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை சோதிவேல்

(பிறந்த இடம்: 6ஆம் வட்டாரம், மண்டைதீவு,
வசிப்பிடம்: உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை சோதிவேல் 05.01.2010 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-புஷ்பமணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான முத்தையா தவமணி தம்பதியினரின் மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் மனோகரனின் (ராஜன்-லண்டன்) பாசமிகு தந்தையும் சோதிநாயகி, சகுந்தலா, கேதீஸ்வரநாதன், உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகசோதி, சாந்தகுலசிங்கம், சந்தானலட்சுமி, ஜெயலா (லண்டன்) மற்றும் திருமலர்தேவி (சிங்கப்பூர்), இரத்தினம் (கனடா), தனலட்சுமி (வவுனியா), காலஞ்சென்ற யோகநாதன், சிவசோதி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரன், விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.01.2010 இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் உரும்பிராயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞான வைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
தொ.பே: 021 4590206

தகவல்
குடும்பத்தினர்.

(C-4157)

# இன்று ஒரு தகவல்

## உயிருள்ள ஓவியம்

ஒரு ஊரில் ஒரு மன்னர் இருந்தார். ஒருநாள் அவருடைய அரசவைக்கு ஓர் ஓவியன் வந்தான். அவன் சீன தேசத்திலிருந்து வந்தவன். தாவோ சிந்தனையாளன்.

அவன் மன்னரின் முன்வந்து நின்றான்.

"யாரும் செய்ய முடியாத ஒன்றை என்னால் செய்ய முடியும்" என்றான்.

இவன் இப்படிச் சொன்னதைக் கேட்டதும் அங்கேயிருந்த அரசவை ஓவியனுக்கு கோபம் வந்துவிட்டது.

"இதோ பார். இப்படியெல்லாம் பேசக்கூடாது. நான் வேண்டுமானால் உன்னுடைய சவாலை ஏற்றுக் கொள்கிறேன்.

நாம் இருவரும் ஓவியம் தீட்டுவோம். அதைப் பார்த்துவிட்டு நம் இருவரில் யார் சிறந்த ஓவியன் என்பதை மன்னரே தீர்மானிக்கட்டும்" என்றான்.

அவனும் சரியென்று ஒத்துக் கொண்டான்.

போட்டி ஆரம்பமாகியது.

அரசர் அவர்களுக்கு இரண்டு சுவர்களை ஒதுக்கிக் கொடுத்தார். ஆறுமாத காலம் அவகாசம் கொடுத்தார்.

இரு ஓவியர்களும் அவரவர் வேலையை ஆரம்பித்தார்கள். இரவு பகலாக வேலை செய்தார்கள். ஆறு மாதம் முடிந்தது. அரசர் வந்து பார்த்தார்.

முதலில் தன்னுடைய அரசவை ஓவியர் தீட்டியிருந்த ஓவியத்தைப் பார்த்தார். மிகவும் நன்றாக இருந்தது. பாராட்டினார்.

"இதோ பார்... உன்னுடைய ஓவியம் அற்புதமாக உயிரோட்டமுள்ளதாக இருக்கிறது. கலையின் உச்சமே இதுதான். இதைவிடச் சிறந்த ஓவியத்தை வேறு யாராலும் படைக்க முடியாது" என்றார்.

அதன்பின் அந்த சீன ஓவியனிடம் போனார்.

"எங்கே? உன்னுடைய ஓவியம்" என்றார்.

"திரைச்சீலையை விலக்கிவிட்டுப் பாருங்கள்" என்றான். மன்னர் திரைச்சீலையை விலக்கினார்.

உள்ளே ஓவியம் இருக்க வேண்டிய இடம் கண்ணாடி போல் தெரிந்தது.

அவன் அந்த ஆறுமாத காலமாக அந்தச் சுவரைத் தேய்த்து கண்ணாடி போல் ஆக்கி வைத்திருந்தான். அதற்கு நேராக எதிர்ச் சுவரில் அரசவை ஓவியன் தீட்டிய ஓவியம் இருந்தது. அது எதிரிலிருந்த இந்தக் கண்ணாடியில் பட்டுப் பிரதிபலித்தது.

மன்னர் யோசிக்க ஆரம்பித்தார். அதன்பின் அந்த சீன ஓவியனைப் பார்த்துக் கேட்டார்.

"இதோ பார்... நீ என்னுடைய ஆளைத் தோற்கடித்துவிட்டாய் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் எங்களை ஏமாற்றியிருக்கிறாய். எந்த ஓவியமும் நீ வரையவில்லையே" என்றார்.

"அரசே! இதுதான் உண்மையான ஓவியம். உயிருள்ள ஓவியம்! இது மனோபாவங்களைப் பிரதிபலிக்கும். மாறுகின்ற காலங்களை அப்படியே காட்டும்" என்றான் அந்த சீன ஓவியன்.

கையால் வரைகின்ற ஓவியங்களில் சலனமில்லை. கண்ணாடி அப்படியில்லை. சக்தியின் ஓட்டம் எப்பொழுதும் அதில் இருந்து கொண்டேயிருக்கும். கண்ணாடி மட்டுமே ஜீவனுள்ள ஓவியமாக இருக்க முடியுமென்பதை அந்த சீன ஓவியன் தெரிந்து வைத்திருந்தான்.

ஒவ்வொரு குழந்தையும் இந்தக் கண்ணாடியோடு தான் பிறக்கிறது. ஆனால் நாம் என்ன செய்கிறோம் என்றால் ஓவியங்களை கண்ணாடி மீது பதிப்பித்து விடுகிறோம்.

கண்ணாடி நம்மைப் பிரதிபலிக்கிறது. நம்முடைய அழகோ அவலட்சணமோ கண்ணாடியைப் பாதிப்பதில்லை. ஏனெனில் அதற்கு 'மனம்' கிடையாது.

கடந்து போன விநாடியைப் பற்றி அது சிந்திப்பதில்லை. அடுத்த கணத்தைப் பற்றிய எதிர்பார்ப்பும் அதற்கு இல்லை. அதுதான் பற்றற்ற நிலை. மனிதனுக்குத் தேவைப்படுவது அதுதான்.

கண்ணாடியிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இது. வாழ்க்கையில் மனிதர்களை நேசிக்கலாம். உலகின் அழகையெல்லாம் பிரதிபலிக்கலாம். ஆனால் எதையும் பற்றிக் கொண்டுவிடக்கூடாது.

துயரம் என்பது பற்றுக்களின் சாயை. கண்ணாடி முன் நிற்கும் போதெல்லாம் நமக்கு இந்த ஞாபகம் வர வேண்டும்.

ஒரு குடும்பத்தலைவர் ஒருநாள் காலையில் எழும்பியதும் சத்தம் போட்டார்.

"யார் இந்தக் கருங்குரங்கின் படத்தை என் ரூமில் கொண்டுவந்து மாட்டியது?" என்று கத்தினார்.

சமையலறையிலிருந்த மனைவி, "தூக்கக் கலக்கத்தில் உளராதீங்க... நல்லா பாருங்க... அது படமில்லை. முகம் பார்க்கிற கண்ணாடி" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்ப மலேசியா அரசு நடவடிக்கை

## நிலைகுலைந்த நிலையில் அவர்கள்

மலேசியாவில் புகழிடம் பெற்றுள்ள ஈழத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்க மலேசிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதால் அவர்கள் நிலை குலைந்து போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் மீண்டும் அவர்கள் இலங்கைக்கு செல்லத் தயாராக இல்லை என தெரிவிப்பதாக மலேசிய மனித உரிமை கழகத்தின் தலைவர் சட்டத்தரணி க. ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

மலாக்கா மாச்சாப் உம்பு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈழ அகதிகள் தற்போது கோலாலம்பூர் சர்வதேச விமானத்தின் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கைக்கு திரும்ப அஞ்சுகின்றனர். நாடு திரும்பினால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

இவர்கள் இன்று அல்லது நாளை இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படலாம் எனவும் உட்துறை அமைச்சு அதற்குரிய பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளது என ஆறுமுகம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவது மனிதாபிமானமற்ற கொடுமையான செயலாகும். சர்வதேச விதிமுறைகளுக்கு முரணானது.

இவர்களை திருப்பி அனுப்ப வேண்டுமாயின் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகம் அதனை பரிசீலிக்க வேண்டும். மலேசியாவில் இதுவரை அங்கீகரிக்கப்பட்ட 3 ஆயிரம் தமிழ் அகதிகள் இருக்கின்றனர்.

இவ்வாறு மலேசிய அரசாங்கம் தமிழர்களை திருப்பி அனுப்பும் மனிதாபிமானமற்ற வகையில் நடந்து கொள்ளக்கூடாது. மலேசியாவில் உள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் மனிதாபிமானமாக செயற்பட வேண்டும். அவர்கள் மனிதர்களாக நடத்தப்பட வேண்டும் எனவும் ஆறுமுகம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பினால் அது மலேசியாவை சர்வதேச ரீதியாக பாதிக்கக்கூடும் என மலேசிய இந்திய இயக்கங்களின் செயலாளர் ஜோர்ஜ் குணராஜ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது மலேசியத் தமிழர்களை அவமதிப்பதாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனிடையே தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக மலேசிய மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர் சட்டத்தரணி சிவசுப்பிரமணியம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து மலேசிய குடிவரவு குடியகல்வு துறை மற்றும் அகதிகளுக்காக ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (2-6)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் 5 மணிவரை வடமராட்சி பிரதேசம் முழுவதும் மின் தடைப்படும் என சுன்னாகம் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (6-4)

## அரச உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி

நவம்பர் மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 750 ரூபா வாழ்க்கைச் செலவுப்படியின் நவம்பர், டிசம்பர் மாதத்துக்கான ஆயிரத்து 500 ரூபாவை இன்று வெள்ளிக்கிழமை சகல ஊழியர்களும் பெறும் வண்ணம் வழங்குமாறு திறைசேரி நாயகம் பி.வி. ஜெயசுந்தர 29 (vii) சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார். (2)

# சுகாதார சீர்கேடுகளால் டெங்குநோய் பரவும் அபாயம்

## பொதுமக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பிரதான பாடசாலைகளான வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகியவற்றின் அருகிலும் ஆரியகுளம் புதிய உயர் கல்லூரிக்கு அருகிலுமுள்ள வடிகால்களில் பொலித்தீன்கள் அடைத்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் திருநெல்வேலி சிவகாமியம்மன் கோயிலுக்கு முன் உள்ள மதகிலும் நீர் தேங்கியுள்ளதாகவும் அப்பகுதியில் குப்பைகள் மிகுந்து காணப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த காரணிகள் நுளம்பு பெருக்கத்திற்கு வழிவகுப்பதாகவும் டெங்கு நோய் பரவுவதற்கு ஏதுவாகவும் அமைகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (6-4)

## இராசி பலன்

08-01-2010

(மார்கழி 24 வெள்ளிக்கிழமை)

அட்டமி முற்பகல் 09.41 மணிவரை

சித்திரை முன்னிரவு 10.03 மணிவரை

இராகுகாலம் 11.02-12.32 மணிவரை

சுபநேரம் 6.32- 8.02 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தெய்வதரிசனம், எடுத்த காரியம் கைகூடும், தனலாபம், நல்ல வரவேற்பு. |
| இடபம் | நோய் குணமடைதல், தெய்வ சிந்தை, காரிய நன்மை, போசன சுகம். |
| மிதுனம் | வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், அதிக பிரயாசை, தனக் குறைவு. |
| கடகம் | மனச்சஞ்சலம், தொழில் விருத்தி, நல்ல செய்தி, நல்ல முயற்சி. |
| சிங்கம் | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், நல்ல செய்தி, தெய்வ தரிசனம். |
| கன்னி | விவாதம், பணவிரயம், கௌரவக் குறைவு, உடல் நலக்குறைவு. |
| துலாம் | தெய்வ சிந்தை, உறவினர் வருகை, காரிய சித்தி, பெரியோர் உதவி. |
| விருச்சிகம் | காரிய அலைச்சல், தெய்வ சிந்தை, சயன சுகக்குறைவு, சுபசெலவு. |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், நற்செய்தி, போசன சுகம். |
| மகரம் | அதிகாரம், கீர்த்தி, தொழில் ஆர்வம், தேகநலன். |
| கும்பம் | கட்டுப்பாடு, எதிர்பாராத நன்மை, பித்த ரோகம், திடீர் பயணம். |
| மீனம் | அபகீர்த்தி, முயற்சி தாமதம், பணக்குறைவு, போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 220 | 240 | 250 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 100 |
| கரட் | 120 | 140 | 140 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 120 | 140 | 70 |
| வாழைக்காய் | 60 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 220 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 180 | 200 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 160 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | 280 | 300 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 110 | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | 130 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 30 |
| தேசிக்காய் | 90 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |



சர்வதேச இணைய வானொலியான வாரணம் எவ். எம்.மின் யாழ். மாவட்ட ஒலிபரப்பு அங்குரார்ப்பண விழாவும் ஒலிபரப்பு இதழியல் பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வும் கன்னாதிட்டி வீதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயா சச்சிதானந்தம் தலைமையுரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஒலிபரப்பினை ஆரம்பித்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருதொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

## 50ஆவது ஆண்டு பொன்விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு பொன்விழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இவ்விழாவினை முன்னிட்டு கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் உள்ளூர் கழகங்கள் பங்குகொள்ளும் மரதன் ஓட்டப் போட்டி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மேலும் 5பேர் பங்குகொள்ளும் 6 பந்து பரிமாற்றம் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டி உள்ளூர் கழகங்களில் பங்குகொள்ளும் வில்கல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டி, உள்ளூர் கழங்களுக்கிடையிலான விலகல் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டி, தாச்சிச் சுற்றுப்போட்டி போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மைதான நிகழ்வுகளும், மத்திய கிராம முன்னேற்றச் சங்க மாலை நேர வகுப்பு மாணவர்கள் மற்றும் பாலர் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள், பட்டிமன்றம், நாடகங்கள் என்பனவும் இடம்பெற்று மாலை பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது. (6-4)

## கலந்துரையாடல்

(வடமராட்சி)

மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அப்பகுதி மக்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பு பருத்தித்துறை தட்டாதெரு வீதியில் அமைந்துள்ள குலசிங்கம் என்பவரது வீட்டில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (6-4-10)

## யாழ்.செய்திகள்

## புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

(தனங்கிளப்பு)

மறவன்புலோ சிவகவி சனசமூக நிலையத்திற்கு புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக கு.சரவணபவன், செயலாளராக திருமதி சி.சுபலட்சுமி, பொருளாளராக திருமதி நவரத்தினம் ரதிதேவி, போசகராக தி.மகாலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (6-4-37)

✠✠✠

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக க.நவரத்தினம், செயலாளராக சு.ஜெயக்குமார், பொருளாளராக சி. திருஞானசம்பந்தர், போசகராக முன்னாள் தலைவர் ச.சண்முகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6-4-37)

## நெடுந்தீவில்

# இலவச மருத்துவ முகாமும் சுகாதார விழிப்புணர்வும்

யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனின் வழிகாட்டல் அனுசரணையுடன், சர்வதேச மருத்துவக் குழுவினர் நெடுந்தீவில் இலவச மருத்துவ முகாமினையும், சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகளையும் முன்னெடுக்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்வானது நாளை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நிகழ ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்களுடன், பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றியல் நிபுணர் டாக்டர் பு.பவானியும் கலந்துகொள்கிறார் என்றும் அவருடன் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை மற்றும் நெடுந்தீவு வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் துணை மருத்துவக் குழுவினரும் இணைகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் நிகழ்வில் கலந்துகொண்டு தமது மருத்துவ தேவைகளைப் பூர்த்திசெய்யும் வண்ணம் நெடுந்தீவு மக்கள் அன்புடன் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள் என்று மேற்படி மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (2-6)

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு ஜேர்மன் அமைப்பினால் நிதியுதவி

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயகத்தில் உள்ள வல்வெட்டித்துறை றோ.க.த.க. பாடசாலையில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் மற்றும் வாழ்வாதார உதவிகளை ஜேர்மனியை தளமாகக் கொண்டு இயங்கும் அமைப்பான நேசக்கரம் அமைப்பு வழங்க முன்வந்துள்ளது.

இதன்முதற்கட்டமாக அவ் அமைப்பு ரூபா 10 ஆயிரத்தை பாடசாலை அதிபர் நா. கண்ணதாசனிடம் அனுப்பிவைத்துள்ளது. இவ் அமைப்பின் இணைப்பாளரான யாழ். குப்பிளானைச்சேர்ந்தவரும் தற்போது ஜேர்மனியில் வசித்து வருபவருமான திருமதி சாந்தினி ரமேஸ் இணையத்தளத்தினூடாக பாடசலை அதிபரிடம் தொடர்புகொண்டு இவ் உதவியை இடம்பெயர் முகாமில் உள்ள மாணவர்களுக்கும் வழங்க முன்வந்துள்ளார். ஒவ்வொரு மாதமும் நிதி உதவி செய்வ தாகவும் உறுதியளித்துள்ளார் எனவும் குறிப்பிடப்படுகிறது. இதேவேளை இதனை நடைமுறைப் படுத்த வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அனுமதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4-19)

## மீளக்குடியேறிய மக்களின் தேவை தொடர்பான மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களின் தேவை தொடர்பான மதிப்பீடு நாளை சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த முறை நடைபெற்ற தேவை மதிப்பீட்டில் கலந்துகொள்ளாதவர்கள் இம்முறை தவறாது வருகை தருமாறு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் கேட்டுக்கொள்கின்றார். (6-30)

## டெங்கு நோய் ஒழிப்பு

யாழ்ப்பாணத்தில் டெங்குநோய் வேகமாகப் பரவி வரும் (Endemic) நிலையை அடைந்துவிட்டது எனவும் இதனால் தாம் அவசர நிலையாகச் செயல்படும் நிலை உருவாகியுள்ளதாகவும் யாழ்.மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை தற்போது வைத்தியசாலைகளில் ஏணைய ஆய்வுகூட நடவடிக்கைகளை விட டெங்குப் பரிசோதனையே முதன்மைப் படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மேலும் சித்திரனெல்லா எண்ணெய் பூசுவதால் டெங்கு நுளம்பு கடிப்பதை தவிர்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கொக்குவில், திருநெல்வேலியில் பாடசாலை மாணவர்கள் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-2)

## நன்கொடைப் பணத்தினை பெற்றுக்கொள்ளவும்

யாழ் .மாநகர சபைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கான வருடாந்த நன் கொடைப் பணத்தினை எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை அலுவலக நேரத்தில் மாநகர சபைக்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளும் படியும் வழமை போல பணத் தினை பெறுகின்ற சனசமூக நிலையங்கள் அதற்குரிய் ஆவணங்களினை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் யாழ். மாநகர சபை ஆணையாளர் கேட்டுக் கொள்கின்றார். (6-30)

## ஆங்கில கற்கைநெறி விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தின் பொது ஆங்கில கற்கை நெறிக்கு விண்ணப்பித்து பதிவு செய்தவர்களுக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாகும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச-5)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை மஞ்சி பிஸ்கற் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் நாளை சனிக்கிழமைக்கு முன்பாக கி.மனோகரன் 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் சங்க செயலாளரின் முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றோ அல்லது சுயமாகத் தாயரித்தோ சமர்ப்பிக்குமாறு சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (6-4)

## யோகாசன பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் இலவச யோகாசன வகுப்புக்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் ஆண், பெண் நோயாளர்களுக்கானது எனவும் ஆர்வமுள்ளவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் தெரிவித்துள்ளார். (6-4)

# உள்ளூராட்சி மன்ற செயலாளர்கட்கு,


டெங்கு நோய் கட்டுப்பாட்டில் உங்களது பங்களிப்பும், ஒத்துழைப்பும் மிக முக்கியம். உங்களிடமுள்ள வளங்களைத் திரட்டி பின்வரும் செயற்பாடுகட்கு முன்னுரிமை வழங்கும்படி வேண்டுகின்றேன்.

1. திண்மக்கழிவுகள் கிரமமான முறையில் அகற்றப்பட வேண்டும்
2. பொதுச்சந்தைகள் போன்ற பொது இடங்கள் கிரமமாக சுத்திகரிக்கப்பட வேண்டும்.
3. கழிவுநீர் வாய்க்கால்கள் நீர்தேங்கி நிற்காதவாறு சுத்தம் செய்யப்பட வேண்டும்.
4. பராமரிப்பின்றிக் காணப்படும் காணிகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
5. நுளம்புக் கட்டுப்பாட்டு பணிகட்கு (புகையூட்டல்) வேண்டிய உதவிகளை வழங்க வேண்டும்.
6. டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.
7. முன்பள்ளிகளில் டெங்கு நோய் ஒழிப்பு சுத்திகரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

# விஜயநகரக் காலச் சிற்பக்கலை



விஜயநகரம் - உள்கோட்டை வாசல்

### விஜயநகர மன்னர்கள்

கர்நாடகத்தைச் சேர்ந்த பெல்லாரி மாவட்டத்திலே ஒசுப்பேட்டை என்னும் ஓர் ஊர் உள்ளது. அதில் இருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தில் ஹம்பி என்ற சிற்றூர் காணப் படுகின்றது. அதுவே சுமார் 700 வருடங்க ளுக்கு முன்பு விஜயநகரம் என்னும் பெய ரால் சிறப்புற்று விளங்கியது. அங்கே பெரு நகரம் ஒன்றின் அழிபாடுகள் பரவலாகக் காணப்படுகின்றன.

விஜயநகரம் சங்கம சகோதரர்களினால் பதினான்காம் நூற்றாண்டிலே இராச்சியம் ஒன்றின் தலைநகரமாக அமைக்கப்பட்டது. தென்னாட்டின் இந்துக்களைத் துருக்கியர் ஆதிக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற் கென்றும், இந்து சமயத்தையும் அதனைச் சார்ந்த கலாசாரத்தையும் காப்பாற்றுவதற்கும் அந்த இராச்சியம் அமைக்கப்பட்டது. காலப் போக்கிலே அது விஸ்தாரமாகிப் பெரும் பேரர சாகியது. கர்நாடக தேசத்தின் பெரும்பகுதியும் தமிழகமும் தெலுங்கு தேசத்தின் பல பாகங் களும் அதில் அடங்கியிருந்தன. கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக் காலத்தில் விஜய நகரத்தின் ஆதிக்கம் உன்னத நிலையிலே காணப்பட்டது.

சங்கமர் (1336 - 1486), சாளுவர் (1418 - 1505), துளுவர் (1505 - 1570), ஆறவீடு (1572 - 1649) என்னும் வம்சங்களைச் சேர்ந்த மன்னர்களின் வரிசைக்கிரமமாக விஜயநகரத்தை ஆட்சி புரிந்தனர். பொது வாக அவர்கள் எல்லோரும் கலை வளர்ச் சிக்கு ஆதரவு புரிந்தனர். இரண்டாம் தேவரா யன் (1422 - 1446), மல்லிகார்ச்சுனன் (1447 - 1465), வீரநரசிம்மன் (1505 - 1509), ஸ்ரீரங்கன் (1572 - 1585) முதலிய பேரரசரின் காலங்களில் இலக்கியம், கட்டடக்கலை, சிற்பக்கலை போன்றவற்றில் உன்னத வளர்ச்சிகள் ஏற்படலாயின. கி.பி. 1565 ஆம் ஆண்டு தலைக்கோட்டையில் நடந்த போரிலே தக்கணத்துச் சுல்தான்கள் ஐவரும் ஒன்றுகூடித் தாக்கி விஜயநகரத்தை அழித்தனர். துளுவர்களின் ஆட்சிக்கால முடிவில் இப்பெருங்கேடு நிகழ்ந்தபோதும் ஆறவீடு வம்சத்தவர் தோன்றி விஜயநகரப் பேரரசைப் புனர்நிர்மாணஞ் செய்தனர். சாளு வர் காலத்திலே கேழதி, இக்கேரி, மதுரை, தஞ்சாவூர், செஞ்சி என்பவற்றிலே நிறுவப் பட்ட நாயக்க வம்சத்தவர் விஜயநகர காலத் துக் கலாசார மரபுகளைப் பேணிப் போற்றி அவை மேலும் அபிவிருத்தி அடைவதற்கு வழிவகை செய்தனர். தென்னிந்தியக் கலை வரலாற்றைப் பொறுத்த வரையில் நாயக்கர் காலம் விஜயநகரப் பண்புகளின் தொடர்ச்சிக் காலம் ஆகும்.

### விஜயநகர அழிபாடுகளும் சிற்பங்களும்

ஒசுப்பேட்டையில் இருந்து பெருந்திலே பிரயாணஞ் செய்யில், முதுவீரண்ணா என்று அழைக்கப்படும் வீரபத்திரன் கோயிலருகிலே இறங்கி நடந்து சென்றால் விஜயநகரத்துக் கட்டடங்களினதும், சிற்பங்களினதும் சிறப் பினை அழிபாடுகளின் மூலம் கண்டறிய லாம். வீரபத்திரர் கோயிலிலே மிகப்பெரிய சிற்பங்கள் சில காணப்படுகின்றன. வீரபத்திரர், இலக்குமி, நரசிம்மர், கடுகுகணபதி, சிவலிங் கம், நந்தி ஆகிய உருவங்களைக் காணலாம். வீரபத்திரரின் கோலம் உத்தானமானது, படிமம் ஸ்தானக நிலையில் அமைந்துள்ளது. கரங்கள் ஒவ்வொன்றிலும் கத்தி, வில், அம்பு, கேடயம் என்பன அமைந்திருக்கின்றன. கனல் தெறிக்கும் கண்களுடன் தக்கனைத் தண்டித்த வீரபத்திரரை அந்நாட்களிலே போர்க் கடவுளாக வழிபட்டனர். கன்னட - தெலுங்கு நாயக்கர் வீரபத்திரரைத் தம் குலதெய்வமாகப் போற்றினார்கள். அந்த மரபு இன்று வரை நிலவி வருகின் றது.


விஜநகரச் செல் வாக்கு கர்நாடகத்தி ற்கு அப்பாற் பரவிய பொழுது தமிழகம், தெலுங்கு தேசம், கலிங்க தேசம் ஆகிய வற்றிலும் வீரபத்திரர் வழிபாடு அதிக செல் வாக்கினைப் பெறத் தொடங்கியது. வீரபத் திரரின் படிமங்களைத் தென்னிந்தியா முழுவ திலுங் காண முடிகின் றது. உதாரணமாகத் தெலுங்கு தேசத்திலே லெபாஷி, ஸ்ரீசைலம் என்பவற்றிலே வீரபத் திரருக்கு மிகுந்த முக்கி யத்துவம் வழங்கப் பட்டுள்ளது. தமிழ கத்திலே மதுரை, தாடிக் கொம்பு என்னுமிடங்களில் வீரபத்திர ரின சிற்பங்கள் சிறப்பிடம்பெறுகின்றன. விஜய நகரத்திலே காணப்படும் உத்தான வீரபத்தி ரனைச் சதாசிவராயரின் ஆட்சிக் காலத்தில் 1545 இல் பிரதிஷ்டை செய்தனர். ஆயினும், வீரபத்திரர் வழிபாடும் அதற்குரிய வழிபாட்டுச் சின்னங்களும் தென்னிந்தியா விலே அதற்கு முன் நெடுங்காலமாக நிலை பெற்றுள்ளன. உத்தான வீபத்திரரின் கோலம் மிகப் பெரியுது. எனினும், அவர் பள்ளி கொள்ளுங் கோயில் அளவிற் சிறியதாகும். அது முதுவீரமம்மன் கோயில் என்று குறிக்கப்படுகின்றது. இந் நாட்களிலும் அங்கு வழிபாடு நடைபெறு கின்றமை குறிப்பிடற்குரியதாகும். அக் கோயி லைத் தாண்டிச் சென்றதுடன் விஜயநகரத் தின் வானளாவிய பெருங்கோயில்களைக் காணலாம்.



மதுரை -சிவன் பார்வதி சுகாசனமூர்த்தம்

### நரசிம்மர்

நெல்லும் கரும்பும் விளைகின்ற வயல் கள் நடுவே அமைந்துள்ள பாதை வழியே சிற தூரம் நடந்து சென்றதூடம் விஜயநகரத் தினுட் பிரவேசிக்கலாம். அங்கு இடப்பக்கத் திலே இரு உருவங்கள் தென்படும். அவற் றிலொன்று யோகநிலையில் உத்குடிகாச னத்தில் அமர்நதுள்ள இலக்குமி - நரசிம்மர் வடிவமாகும். மற்றையது நிலத்திலே நடப் பெற்றுத் தண்ணீரைப் பீடமாகக் கொண்டு தோன்றும் சலகண்ட மகாலிங்கம் என்பதா கும். நரசிம்மர் வழிபாடு மிகவும் புராதன மானது. குப்தர் காலக் குடபோகங்களிலே கருவறை மூர்த்தியாக நரசிம்மர் விளங்கு கின்றார். மனித உடலின் அம்சமும், சிங்கத் தலையும் கூடி அமைந்தவர் நரசிம்மர்.



விஜயநகரம் - விட்டலசுவாமி கோயில்

விருபாக்ஷர் கோயில்

வைணவ மரபிலே நரசிம்மருக்குச் சிறப்பிடம் உண்டு. திவ்விய பிரபந்தப் பாசுரங்களிலே நரசிம்மர் போற்றப்படுகின்றார். பாண்டியர், பல்லவர் காலத்தில் நரம்மரின் வடிவங்கள் கோயில்களில் அமைக்கப்பட்டிருந்தன. நாமக்கல், ஆனைமலை, சிங்கப் பெருமாள் கோயில் என்பவற்றிலே கருவறையில் வீரநரசிம்மரின் உருவம் அமக்கப்பட்டுள் ளது.

பேராற்றலின் உருவமாகிய வீரநரசிம் மரைத் தங்கள் அபிமானத்திற்கரிய கடவுளாக விஜயநரக மன்னர்கள் போற்றினார்கள். அவரின் நாமத்தைத் தங்கள் புதல்கள் சிலருக்கும் சூட்டினார்கள். நரசநாயக்கர் , சாளுவநரசிம்மன், இம்மடி நரசிம்மர் என்னும் பெயர்கள் அத்தகையனவாகும். அதர்மத்தை அழித்து நீதியை நிலைநாட்ட அவதாரம் செய்த வீரநரசிம்மர் தனது பணி நிறைவேறி யதும் யோகநாயக்கராய் இலக்குமியுடன் அமர்ந்து விடுகிறார். பொதுவாக அந்த நிலை யில் அவரின் படிமம் பத்திராசனத்தின்மேல் அமைந்திருக்கம். ஆனால், விஜயநகரத்தில் அவர் பாம்பணைப் பள்ளியில் வீற்றிருக்கிறார். அதே சமயம் இராசநாகத்தின் ஆறு படங்கள் அவரின் சிங்கத் தலைக்கு மேற் தோன்று கின்றன. நாக படங்களுக்கு மேல் மேலும் சிங்கத்தலை தோன்றுவது படிமக் கலையில் ஒரு புதுமையாகும். மேலே காணப் படும் சிங்க முகம் மகரதோரணத்தின் முடியில் இருப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது.

கணபதி கடுகு கணபதியாகிய விக்கின விநாயகர் பத்திராசனத்தின் மேல் லலிதா சனக் கோலத்தில் அமர்ந்திருக்கிறார். கரங்களிலே அங்குசம், பாசம், மோத கம், தந்தம் என்பன காணப்படுகின் 98 றன. அவருடைய முடிகரண்ட மகுடமாகும். காது கள் சுளகு போல் விரிந்து தோற்றமுடை யவை. வயிறு மத்தளம்போன்றது. உதர பந்தம், உபவீதம் முதலான பல ஆபரணங் கள் தெரிகின்றன. கணபதி வழிபாடு குப்தர் காலம் முதலாக நிலவி வந்திருக்கின்றது. காணபத்யம் என்பது தனியொரு வழிபாட்டு நெறியாகவும் கொள்ளப்பட்டது. கர்நாடக தேசத்தில் கணபதி வழிபாடு சிறப்புப் பெற்றி ருந்ததனை அவதானித்த வெளிநாட்டவர் களும் அதனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள னர். துருவாச சமுத்திரத்திலே அமைந்திருந்த விக்னேஸ்வரர்கோயிலைப் பற்றி **தொமின் கோபைஸ்** என்னும் போர்த்துக்கேயர் வர்ணிக் கின்றார். அங்கே காணப்பட்ட மனித உடலும் யானைத் தலையும் தும்பிக்கையும் தத்தங் களும் கொண்டிருந்த படிமத்தைப் பற்றி அவர் வர்ணிக்கின்றனர். இப் படிமத்திலே ஆறு கரங்கள் முன்பு இருந்தன என்றும், அவற் றிலே இரண்டு விழுந்துவிட்டன என்றும் , எஞ்சிய இரண்டு விழும் சமயத்திலே பிரளயம் நிகழும் என்றும் அங்குள்ளவர்கள் கூறிய தாக அவர் குறிப்பிடுகின்றார்.

விநாயகருக்குத் தினந்தோறும் அமுது படைத்து வழிபாடு செய்தனர். அச்சமயத்தில் நாட்டியப் பெண்கள் உபசாரமாக நடன மாடுவது வழமை என்றும் அவர் குறிப்பிடு கின்றார்.

விஜயநகரத்தின் வடபுறத்திலே கருங்கற் பாறைகளை ஊடறுத்துச் செல்லும் துங்கபத் திரை ஆறு ஓடுகின்றது. தென்மேற்கிலே ஹேமகூடம் என்னம்மலை காணப்படுகின் றது. அதன்மேலே கதம்ப-நாகர கலைப்பாணி யில் அமைந்த சமண வஸ்திகளும் இந்துக் கோயில்களும் அமைந்திருக்கின்றன. தென் கிழக்கு மூலையிலே மாதங்கபர்வதம் என்னும் மலை உள்ளது. மேற்கிலே விரூபாக்ஷர் ஆலயமும் கிழக்கே அரசரின் சபாமண்டமும் அமைந்துள்ளன. அவற்றிற்கிடையே அங் காடிகளில் அமைந்த கட்டடங்களின் அழிபாடு களும் கடைவீதிகளின் சுவடுகளுந் தெரிகின் றன. விரூபாக்ஷர் ஆலயத்திற்கு வடக்கே

கலாநிதி இராசு காளிதாஸ்

பம்பாதேவி கோயில் அமைந்திருக்கின்றது. அது புராதனமானது. கிராமவாசிகள் வழிபட்ட பம்பாதேவி என்னும் கிராமியத் தெய்வத்தை வழிபடுவதற்கென்று அது அமைக்கப்பட்டது. இரண்டமாம் தேவராயரின் காலத்திலே (1422-1426) பிரமாண்டமான கட்டடமாக விரூபாக்ஷர் ஆலயம் அமைக்கப்பட்டது. விஜய நகரக் கலைப்பாணியில் அமைந்த கோயில் களில் அது உன்னதமான கட்டடமாகும். அதிலே யாளித் தூண்கள், அலங்கார மண்டபம், கோபுரங்கள், பிரகாரம் முதலிய அம்சங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன. மகாமண் டபத்தின் முகட்டு விதானத்திலே சித்திரங்கள் வரையப்பெற்றிருந்தன. திரிபுராந்தகர், கலியாணசுந்தரர், கல்கி ஆகியோரின் உருவங் கள் சிறப்பான கோலத்தில் வரயைப்பெற் றுள்ளன.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## ஆபத்தை விளைவிக்கும் கூம்பு நத்தைகளின் முக்கியத்துவம்

அதிகூடிய நச்சைக் கொண்ட கடல்வாழ் உயிரினங்களில் கூம்பு நத்தையும் (Cone snail) ஒன்றாகும். ஒருவால்புடைய (uni valves) மொலக்காக்களில் (Molluska) உள்ள சாதி Conus ல் அடங்கும். அங்கிகள் கூம்பு நத்தைகள் எனப் பொதுவாக அழைக்கப்படுகின்றன.

இப்பெயர் வரக் காரணம் அவற்றினுடைய கூம்புருவ வடிவமே ஆகும். இவற்றின் சில சிறிய இனங்கள் சிகரெட்டால் சுட்டது போன்ற எரிவை ஏற்படுத்துவதால் சிகரெட் நத்தைகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

இவை விலங்கு இராச்சியத்தில் (Kingdom - Animalia), கணம் மொலக்காக்களில் (Phyllum - Molluska) வகுப்பு கஸ்ரோப் போடோக்களில் (Class Gastropoda) குடும்பம் கோனிடே(family conidae) ஐ சேர்ந்த பெரிய கூட்ட அங்கிகள் ஆகும்.

இவற்றில் உள்ளடக்கப்படும் சில அங்கிகள், நன்கு விருத்தியடைந்த நஞ்சைக் கொண்டிருப்பதால் super family Taxoglossa இனுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவை இரண்டு சோடி உணர் கொம்புகளுடைய தெளிவான தலை, சுருட்டப்பட்ட, சமச்சீரற்ற (Asymmetry) உடல், பெரிய தட்டையான பாதம், கல்சியங் காபனேற்றால் ஆக்கப்பட்ட தனியான, சுருட்டப்பட்ட, ஒருமுனை அகன்ற மறுமுனை ஒடுங்கிய ஓட்டைக் கொண்டவை. சோடியான பூக்களால் (மென் மூடி அறை) சுவாசிக்கின்றன. வாயினுள் வறுகியை (Radula) கொண்டவை.

### கவர்ச்சி தன்மையும் அதன் முக்கியத்துவமும்

கூம்பு நத்தைகளின் பெரிய இனங்கள் 1.3 செ.மீ தொடக்கம் 23 செ.மீ ஐ விடவும் நீளமாக வளரக்கூடியவை. அத்துடன் இவை பல பிரகாசமான நிறங்களிலும், பல நிற சேர்க்கைகளாலும் உருவாக்கப்பட்டிருக்கும். எனினும் சில இனங்களில் நிறவடிவங்கள் பகுதியாக அல்லது பூரணமாக Periostracum எனப்படும் ஒளியை பகுதியாக புகவிடும் (opaque) படையால் மறைக்கப்பட்டிருக்கும்.

பெரும்பாலானவை வெள்ளை, நீலம், இளஞ்சிவப்பு முதலிய அடிப்படை நிறத்தையும், அதனுள் கறுப்பு, மண்ணிறம், செம்மஞ்சள் அல்லது மஞ்சள் நிற வடிவங்களையும் கொண்டவை.

இவற்றின் அழகிய ஓடுகள் வீட்டு அலங்காரப் பொருட்கள் செய்யவும், ஆபரணங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு இவற்றினுடைய ஓடு (Shell) கவர்ச்சித்தன்மையும், அழகுபடுத்தப்படக்கூடியதாக (ornate) இருப்பதனால், இவை உலகளாவிய ரீதியில் ஓடுகளை சேகரிப்பவர்களால் (Shell collectors) பெரிதும் விரும்பப்படுகின்றன.

**Conus magus** (Magician's cone), C. geographus (Geographer's cone), C. Purpurascens (Purple cone), C. Striatre, C. tentile C. Mormoreus என்பன அழகிய cone snail க்குரிய உதாரணங்கள் ஆகும்.

இவை பொதுவாக வெப்ப, இடைவெப்ப வலய கடல்கள், சமுத்திரங்களில் செறிந்துள்ளன. எனினும் சில இனங்கள் பருவகால (temperate) சூழலிலும் வாழுவதற்கு சில குணாதிசயங்களைக் கொண்டுள்ளன.

பொதுவாக (cone snail) கூம்பு நத்தைகள் இரவுக்குரிய (nocturnal) பழக்கமுடையவை. பகல் வேளைகளில் மணலிலும் அல்லது முருகைக் கற்பாறைகளின் கீழும் ஊர்ந்து திரிபவை (burrowing), இரவில் உணவு தேடுபவை.

### நச்சுத்தன்மை

உலகில் உவர்நீர் நிலைகளில் 500 இற்கு மேற்பட்ட conus இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை மிக மெதுவாக நகரும் அங்கிகள்; ஒரே வகையான நச்சு உபகரணத்தை விருத்தி செய்துள்ளன. இவற்றின் விஷம் (toxin), conotoxin என அழைக்கப்படுகின்றது.

மீன்களை பிடிக்க் உதவும் ஓர்வகை ஈட்டி (harpoon) ஐ பயன்படுத்தி விரைவாக அசையும் மீன்கள் முதலியவற்றை பிடித்து உண்ணுகின்றன. இந்த harpoon கள் கைற்றினால் (Chitin) ஆக்கப்பட்ட வெற்றுக் குழாயுருவான, கூரிய முனையைக் (brab) கொண்டவை. இவை குழாயுருவான வெளித்தள்ளத்தக்க அமைப்புடன் (proboscis) இணைந்து இருக்கும்.

Radula ஆனது நச்சை உடலினுள் செலுத்துவதற்கான (hypodermic needle) ஊசியாக செயல்படுகின்றது.

தனது அருகில் உணவைக் கண்டவுடன் குழாயுருவான வெளித்தள்ளும் அமைப்பை (Proboscis) வெளித்தள்ளும். இந்த நீண்ட சுருங்கக் கூடிய அமைப்பின் வலிந்த தசைச் சுருக்கத்தால் radula ஐ அந்த அங்கியினுள் செலுத்தும். நஞ்சு, குழாய் (duct) வழியாக உற்பத்தியாகும் இடத்தில் இருந்து தொண்டையினுள் விடப்படும் ; பின்பு குழாய் உருவ பல் ஊடாக அங்கியினுள் பாய்ச்சப்படும்.

பாய்ச்சப்படும் நஞ்சு உணவாக பயன்பட்ட அங்கியை உடனடியாக நினைவிழக்கச் செய்யும். பின்பு நத்தையானது வறுகியை உள்ளிழுப்பதனால் தனது உணவை (Prey) வாயினுள் உள்ளெடுக்கும்.

உணவு சமிபாடடைந்த பிறகு சமிபாடடையாத பதார்த்தங்களான முள் (spine), செதில்கள் (scales) முதலியன வெளி அகற்றப்படும் harpoon (disposable harpoon) உடன் சேர்ந்து வெளியேற்றுகின்றது.

கூம்பு நத்தைகள் மனிதனுக்கும் பாரிய அளவில் தாக்கத்தை (injuries) ஏற்படுத்தக் கூடியன. அதே சமயத்தில் இறப்பை கூட ஏற்படுத்துபவை.

கூம்பு நத்தையின் விஷம் ஏற்படுத்தும் பாதிப்புக்களாக நோ (intense pain) வீக்கம், உணர்ச்சியற்ற நிலை (numbness), உறுத்துவது போன்ற உணர்ச்சி (tingling) முதலியவற்றைக் கூறலாம். அறிகுறிகள் நத்தையின் விஷம் கொட்டியதும் உடனடியாக ஏற்படுத்தப்படும் அல்லது சில நாட்களின் பின்பு வெளிக்காட்டப்படும்.

மிகவும் ஆபத்தான பாதிப்புக்களான, தசைத் தளர்வு (muscle paralysis) பார்வைக் கோளாறு (change in vision) சுவாச பாதிப்பு என்பன ஏற்பட்டு முடிவில் இறப்பை ஏற்படுத்தக்கூடியவை.

நச்சு உபகரணத்தின் அளவு, இயற்கைத் தன்மை (nature) முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு conus னுடைய 85 (Species) இனங்கள் மனிதனுக்கு பாதிப்பை ஏற்படுத்துவனவாகும்.

பெரும்பாலான ஓடு சேகரிப்பவர்கள் ஒரு கண் பார்வையர்வது இழந்திருப்பர். ஏனெனில் அவர்கள் அவற்றை சோதிப்பதற்காக (professional inspection) கண் அருகில் பிடித்திருக்கும் போது வறுகியால் தாக்கப்படுவார்கள்.

சில பெரிய கூம்பு நத்தைகள் சிலவேளைகளில் கையுறைகள், சுழியோடிகளது உடை ஊடாகவே தோலை தாக்கக்கூடியவை. பெரும்பாலான சிறிய கூம்பு நத்தைகளினது நச்சுத்தன்மையானது தேனீக்களது கொட்டுந் தன்மையிலும் வீரியம் குறைந்தவை.

சில பெரிய வெப்பவலயத்துக்குரிய (tropical) மீனை உணவாக உட்கொள்ளும் நத்தைகளான <u>conus geographus</u> ; <u>c. tulipa</u>, <u>C. striatus</u> முதலியன இறப்பை ஏற்படுத்தக்கூடியவை. இதைவிட ஆபத்தான அங்கிகளாக <u>c. pennaeus</u> , <u>c. textile</u> , <u>c. aulicus</u>, <u>c. magus</u>, <u>c. marmoreus</u> என்பனவும் உள்ளன.

பெரும்பாலான புழுக்களை உணவாக உட்கொள்ளும் இனங்கள் மனிதனுக்கு பெரிய அளவான பாதிப்பை ஏற்படுத்துவது இல்லை.

conus இணங்களின் விஷம் (toxin) நரம்புக் கலங்களால் மூளைக்கு அனுப்பப்படும் கணத்தாக்கங்களை நிறுத்துகின்றது. நோவிற்குரிய கணத்தாக்கம் நரம்புக்கலங்களுக்கு இடையில் கடத்தப்படுதலை கல்சியம், சோடியம் கால்வாய்களை அடைப்பதன் மூலம் (blocking) மூலம் தடுக்கின்றது.

### நோ நீக்கியாகப் பயன்படுத்தல்

இரண்டு தசாப்தங்களின் முன் கூம்பு நத்தைகளினது நஞ்சு (Venom) ஆனது இறப்பை ஏற்படுத்தும் பதார்த்தம் எனக் கருதப்பட்டது. இப்பதார்த்தமானது போதையையும், இறப்பையும் ஏற்படுத்துவதால் தவிர்க்கப்பட்டது. இவ் உயிர் நஞ்சு (biotoxin) மனிதனுக்குப் பாதிப் பானது ஆகி இருந்தது.

ஆனால், ஆராய்ச்சியாளர்கள் அவற்றின் மருத்துவ சம்பந்தப்பட்ட (Pharmaco logical) உயிர் இரசாயன குணாதிசயங்களைக் கொண்டு மிகப்பயனுள்ள (antitoxin) விஷத்திற்கு எதிர்ப்புத்தன்மையை உருவாக்கி உள்ளனர்.

<u>C. magus</u> இனது நச்சுப் பொருளில் இருந்து அதே மாதிரியான (Synthetic copy) ஆன பெப்தைட்டுக்களை (Peptides) Neurex எனும் கலிபோனியாவில் உள்ள உயிரியல் மருத்துவக் கம்பனி வெளியிட்டுள்ளது. இச்சேர்வை (Compound) ஆனது SNX lll அல்லது Ziconotide எனப்படும். இது பிரித்தானியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூம்பு நத்தையிலிருந்து பெறப்பட்ட முதலாவது நோநீக்கி ஆகும்.

Ziconotide புற்று நோய், AIDS, நரம்பு பாதிப்பு, உறுப்புக்களை வெட்டி அகற்றுதல் போன்ற நோய்களின் சகிக்க முடியாத வலியிற்கு ஆறுதல் அளிப்பதற்காகக்கொடுக்கப்படுகின்றது. இந்தப் பதார்த்தம் வலியை மறந்து தூங்குவதற்காகக் கொடுக்கப்படும் மருந்திலும் (morphine) ஆயிரம் மடங்கு வீரியமுள்ளது. அத்துடன் எந்தப் பக்கவிளைவுகளும் அற்றது.

அவுஸ்திரேலியாவில் உள்ள Queen victoria cone (<u>c. victoriae</u>) இல் இருந்து AVCI எனும் சேர்வை (compound) பெறப்படுகின்றது. இது அறுவைச் சிகிச்சைக்குப் பின்னான நோநீக்கியாகவும் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களிற்கும் (Neuropathic pain) குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது. இது நரம்பு பாதிப்பு (Nerve injury) இல் இருந்து இயல்பு நிலைக்கு வருதலை அதிகரிக்கின்றது.

கூம்பு நத்தையிலிருந்து தயாரிக்கப்படுகின்ற மருந்துகள் நோய்வாய்ப்பட்டவருக்குரிய மருத்துவத்திலும் (Clinical medicine) நோய்வாய்ப்பட முன்னான செயற்பாடுகளிலும் (Preclinical trials) பயன்படுகின்றன. உதாரணமாக Alzheimer's disease Parkinson's disease, epilepsy போன்றவற்றைக் குணப்படுத்தப் பயன்படுகின்றது.

இந்த நோ நீக்கிகள் (pain killers) கடலில் இருந்து பெறப்படும் முதலாவதான மருந்துகள் ஆகும். Oxycontin, morphine முதலிய opioid drugs இற்குப் பதிலாகப் பாவிக்க முடியும்.

இதனால் இவ் அங்கியினது பொருளாதார முக்கியத்துவம் ஆனது அவற்றினது அழகு, கவர்ச்சியிலும் அதிகமாக உள்ளது.

கூம்பு நத்தைகளின் பொருளாதார முக்கியத்துவம் காரணமாகவும் இவற்றின் விஷத்தைப் பயன்படுத்தி மருந்துகள் தயாரிப்பதனாலும் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காகவும்அதிகளவில் இவை பல நாடுகளில் பிடிக்கப்படுகின்றன. இதனால் இவற்றின் குடித்தொகை குறைவடைந்து வருகிறது. ஆனால் இவற்றினது எந்தவொரு இனமும் அழிவடைந்துள்ள அங்கிக்கூட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எனினும் சில நாடுகள் இவ் நத்தைகளைப் பிடிப்பதற்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

செல்வி தர்மினி நடராசா
உதவி விரிவுரையாளர்,
விலங்கியற்துறை.

இலங்கை ஓர் தீவாக இருப்பதுடன் முருகைக்கற்பாறைகளை அதிகமாகக் கொண்ட கடற்கரையைக் கொண்டிருப்பதால் கூம்பு நத்தைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. மன்னார் குடாக்கடல் பகுதியில் கிட்டத்தட்ட 38 வகையான இனங்கள் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்திலுள்ள இறந்த நத்தைகளின் ஓடுகளைச் சேகரித்து அவற்றைக் கொண்டு அலங்காரப் பொருட்களைக் குடிசைக்கைத் தொழிலிலேயே உற்பத்தி செய்வதன் மூலமும் இதற்காகப் பெண்களை ஈடுபடுத்துவதன் மூலமும் வேலையில்லாப் பிரச்சினையைக் குறைப்பதுடன் வருமானத்தை ஈட்டுந்தொழிலாக மாற்ற முடியும்.

எமது பிரதேசங்களில் உள்ள கூம்பு நத்தை இனங்களையும் அவற்றினுள்ள விஷத்தின் இரசாயன தன்மையையும் ஆராய்வது இவ்வளத்தின் தூரநோக்குடனான அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 12

பாலூட்டிகளின் நகத்தை ஆக்கும் பிரதான பதார்த்தம் எது?

விடைகளை 20.01.2010 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி

Mr. V. Senthil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna. Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப்பணப் பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட, மீன்பிடியியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர் :
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழக கிளை.

**புதிர் 10 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

யாரும் சரியான விடை அனுப்பாததையிட்டு வருந்துகிறோம்

**புதிர் 11 இற்கான விடை : Seismograph**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 12

சரியான விடை : ..............................
முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
: ..............................
கையொப்பம் : ..............................

# பொன்சேகாவின் வாக்குறுதிகளை நம்புகிறோம் வேறெந்த உடன்படிக்கையும் செய்யவில்லை

## மங்கள சமரவீர



(கொழும்பு)

உடன்படிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சிகள் ஜெனரல் சரத் பொன் சேகாவிற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவரும், ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஊடகப் பேச்சாளருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். சரத் பொன்சேகாவின் வாக்குறுதிகளை எதிர்க்கட்சிகள் நம்புவதாகவும், அதனைத் தவிர வேறு எந்த எழுத்து மூல உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஜெனரல்சரத் பொன்சேகாவிற்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சிறுபான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய பல முக்கிய விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு ரணில் விக்ரமசிங்க ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக தாம் ஒரு போதும் குறிப்பிடவில்லை எனவும் அவை அரசாங்கத்தின் போலியான குற்றச்சாட்டுக்கள் எனவும் கருத்து முரண்பாடு காணப்பட்ட போதி லும் தாம் அவ்வாறு அறிவிக்கவில்லை எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# பிரதான வேட்பாளர்கள் இருவருமே போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள்

## விக்கிரமபாகு கருணாரட்ண குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர்களான சரத் பொன்சேகாவும் மஹிந்த ராஜபக்ஷவும் போர் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விக்கிரம பாகு கருணாரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.



காணாமல் போனோரின் உறவினர்கள் நேற்று முன்தினம் வவுனியாவில் நடத்திய பேரணியின் போதே அவர் இந்தக் குற்றச் சாட்டை சுமத்தினார்.

இந்த இருவருமே தமிழர்கள் பலரின் கொலைகளுக்கு காரணமானவர்கள் என்றும் காணாமல் போனோர் எங்கே உள்ளார்கள்? அவர்கள் எவ்வாறு காணாமல் போனார்கள்? அவர்கள் கொல்லப்பட்டிருந்தால் அவர்களின் சடலங்கள் எங்கே என கருணாரட்ன கேள்வி எழுப்பினார்.

இதேவேளை நிகழ்வில் உரையாற்றிய சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கம், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் இரண்டு தலைவர்களும் தமிழர்களின் கொலைகளுக்கும் அவர்களின் உடமைகளை சேதப்படுத்தியமைக்கும் காரணமானவர்களாவர்.

இந்த நிலையில் சில தமிழ்த் தலைவர்கள் அவர்களை பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என குற்றம்சுமத்தியுள்ளார். (2-6)

# பிரதி அமைச்சர் செல்லச்சாமி பொன்சேகாவுக்கு ஆதரவு

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரதித் தபால் அமைச்சருமான எம்.எஸ்.செல்லசாமி எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஏற்கனவே யோகராஜன் சச்சிதானந்தன் ஆகியோர் விலகி சரத்பொன்சோகாவுக்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்துள்ள நிலையில் நேற்று அக்கட்சியைச் சேர்ந்த செல்லச்சாமி ஆளும் தரப்பிலிருந்து விலகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# மஹிந்தவின் பிரசாரக்கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு பாராட்டு

## அம்பலாங்கொடையில் சம்பவம்

(கொழும்பு)

அம்பலாங்கொடையில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய பிரபல சிங்களத் திரைப்பட நடிகர் சனத் குணதிலக்க சமாதானத்தை உருவாக்குவதில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பங்களிப்பைப் பாராட்டிப் பேசியிருப்பதாக தெரியவருகிறது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய குணதிலக்க, 2002 ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் மூலம் விடுதலைப்புலிகள் பலவீனமடைந்ததாகவும் ரணில் விக்கிரமசிங்கவும் அன்றைய ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கமும் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தலைவர் கருணாவை அந்த அமைப்பிலிருந்து பிரிப்பதில் வெற்றியடைந்ததாகவும் கூறியுள்ளதாக தெரிகிறது.

விடுதலைப்புலிகள் மீண்டும் ஒன்றிணைய முடியாத வகையில் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட நிலைமையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயன்படுத்திக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவரின் இந்தக் கதையை கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சனத் குணதிலக்க , அரசாங்கக் கடைக்குச் சென்றிருந்தாலும் தாம் யாருக்கு ஆதரவளிக்கின்றோம் என்பதை மறந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேடையில் இருந்தவாறு ஐக்கிய தேசியக் கட்சியை பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளனர். (2-6)

# பிரதான வேட்பாளர்கள் தவிர்ந்த ஏனைய ஆறுவேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

பிரதான வேட்பாளர்களைத் தவிர்ந்த ஏனைய ஆறு வேட்பாளர்களுக்கு அமைச்சர்களுக்கு வழங்கப்படும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு அறிவித்துள்ளது.

இதற்கமைய பாதுகாப்பு ஊர்தி உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் எட்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய வேட்பாளர்களும் பாதுகாப்பு வேண்டினால் அதற்கான ஒழுங்குகளை செய்து கொடுப்பதில் சிக்கல் இருக்காதென பொலிஸ் துறையின் தேர்தல் பிரிவு அறிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் அநேகமான வேட்பாளர்கள் பொலிஸ் பாதுகாப்பை கோரவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது. (2-6)

# தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக இலங்கை வர சந்தர்ப்பமில்லை

## ஐ.நா.சபை தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும் பொருட்டு இலங்கைக்கு வருகை தர சந்தர்ப்பம் இல்லை என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்கான தமது குழுவினரை இலங்கைக்கு அனுப்புவதற்கான போதிய கால அவகாசம் இல்லை என குறிப்பிட்டுள்ளது.

மேலும் தமது சபையின் சட்டதிட்டத்தின் படி கண்காணிப்பு குழுவை எந்தவொரு நாட்டுக்கும் அனுப்புவதாயின் சபையின் ஏதாவது அமர்வுகள் அதற்கான அனுமதியை பெறவேண்டும்.

இவ்வாறான நிலையில் இலங்கையில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கண்காணிப்பு பணிகளுக்கு தமது குழுவினரை அனுப்புவது தொடர்பில் அமர்வுகளில் அனுமதியை பெறுவதற்கு போதுமான காலவகாசம் இல்லை என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவதன் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் முன்னர் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் கண்காணிப்பு பணிகளுக்கு வரும் சர்வதேச அமைப்புகள் தொடர்பில் இந்த வார இறுதியில் முழுமையான விபரங்களை வெளியிடக்கூடியதாக இருக்கும் என தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-6)




# எதிர்க்கட்சிகளுக்கு சேறு பூசுகின்ற ரூபவாஹினியின் 5 நிகழ்ச்சிகளுக்கு தடை

## தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளுக்கு சேறு பூசும் வகையில் அரசாங்கத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட 5 நிகழ்ச்சிகளை தடை செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் சட்டங்களுக்கு முரணான வகையில் குறித்த நிகழ்ச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்பட்டு வருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யக்ஷாவேஸய , எதகென நாம , குரவத்தி பசும்பிய , விநிவித மற்றும் கிம்புல் கந்துலு ஆகிய நிகழ்ச்சிகள் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

குறித்த நிகழ்ச்சிகளே தேர்தல் சட்டங்களுக்கு புறம்பான வகையில் அமையப் பெற்றுள்ளதாகத் தெரிவித்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிகழ்ச்சிகளை நிறுத்துமாறு தற்போது உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிகள் எதிர்க்கட்சிகளின் பிரதான வேட்பாளர் ஜனரல் சரத்பொன்சேகா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அவதூறு ஏற்படும் வகையில் அமையப் பெற்றுள்ளதாக சம்பந்தப்பட்ட தரப்பினர் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# நான் தோல்வியடைந்தாலும் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்ற சந்திரிக்காவுக்கு இடமளிக்கவேண்டாம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வியடைந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்ற சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண் டோவிடம் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் வலியுறுத்திக் கூறியிருப்பதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.



குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சாலிந்த திஸாநாயக்க, எஸ். பீ.நாவின்ன, ஜயரத்ன ஹேரத் போன்ற அமைச்சர்கள் அண்மையில் சந்திரிகாவையும், மங்கள சமர வீரவையும் சந்தித்துள்ளதாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஜனாதிபதியிடம் தெரிவித்ததை அடுத்து ஆத்திரமடைந்த நிலையிலேயே அவர் இதனைக் கூறிதாக தெரிகின்றது.

மேலும் சந்திரிக்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் அமைப்பாளர்கள் சிலரை தனது இல்லத்திற்கு அழைத்து கலந்துரையாடியிருப்பதாகவும் தேர்தலுக்குப் பின்னர் அந்தக் குழுவினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்ற திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதிக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாக அலரி மாளிகைத் தரப்புத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (2-6)

# டெங்கு ஆட்கொல்லி நோயிடம் இருந்து எம்மை பாதுகாப்போம்



பெருகிவரும் சனத்தொகைக்கு மத்தியில் தன் கொடிய ஆதிக்கத்தை நிலைநாட்டி பல்லாயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர் உட்பட வயதுவேறுபாடின்றி அனைவரையும் காவுகொண்டுள்ள டெங்குநோய் பற்றிய ஓர் விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

எம் கருத்துணர்விற்கே எட்டாது டெங்கு வைரஸை சாமர்த்தியமாக உடலினுள் உட்புகுத்தும் நுளம்பினால் இந் நோய் பரவுகின்றது. டெங்குக் காய்ச்சல் பற்றி நோக்குமிடத்து, இது ஓர் வைரஸினால் ஏற்படுத்தப்படுகின்ற நோயாகும். இவ் வைரஸானது Aedes agypti என்னும் நுளம்பினால் பரவலடையச் செய்யப்படுகின்றது. இந் நுளம்பானது இருண்ட நீர்தேங்கியுள்ள பிரதேசங்களில் குறிப்பாக வாகன ரயர்கள், இளநீர் கோம்பைகள், சிரட்டைகள், நீர்தேங்கியுள்ள பூச்சாடிகளில் மட்டுமன்றி சனத்தொகை கூடிய பிரதேசங்களான சந்தை, பஸ் தரிப்பிடங்களில் உள்ள நீர் தேங்கிய இடங்களிலும் பெருக்கமடைகின்றது. இவை பாடசாலை வாகனங்களில் காணப்பட்டு மாணவர்களுக்கு தொற்றலை ஏற்படுத்தலாம்.

இந் நுளம்பானது பெரும்பாலும் பகல் வேளைகளிலே மனிதர்களைக் கடிக்கின்றது. இக்காரணத்தினால் மேற்குறிப்பிட்ட இடங்களில் நுளம்பின் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வது இன்றியமையாததாகும்.

இந் நுளம்பினால் காவப்படுகின்ற வைரஸானது, 1, 2, 3, 4 என்னும் நான்கு வகைகளைக் கொண்டுள்ளது. எந்த ஒரு நபரும் ஏதாவது ஒருவகை டெங்கு வைரஸால் முதலாவது தடவை காய்ச்சலுக்குள்ளாகும்போது நோயின் தாக்கம் மிகக் குறைவாகவும் அக் குறித்த நபர் அந்த வகை டெங்கு வைரஸிற்கு எதிராகவே மட்டும் நிர்ப்பீடனத்தைப் பெற்றுக்கொள்ளமுடிகிறது.

இரண்டாவது / மூன்றாவது தடவை வேறு ஒரு வகை டெங்கு வைரஸின் ஆதிக்கத்திற்குட்படும் போது மிகப் பாரதூரமான விளைவுகளே ஏற்படுகின்றன. இது சில வேளைகளில் மரணத்தை ஏற்படுகின்றது.

நோயின் அறிகுறிகள் என நோக்குமிடத்து, அதிகரித்த உடல் வெப்பநிலை (வெப்பநிலை வீச்சு வேறுபடலாம்). கடுமையான தலைவலி, கட்கோளப் பகுதிகளில் கடுமையான வலி, தலைகள் மற்றும் மூட்டுக்களில் வலி, உடற்பகுதிகளில் சிவப்பு நிறப் புள்ளிகள், உடலும் வாய்ப்பகுதியும் சிவப்பு நிறமாகத் தோன்றலாம். காய்ச்சலானது 2 தொடக்கம் ஏழு நாட்கள் நீடித்து சிலரில் எந்த விதமான பக்கவிளைவுகளுமின்றி குறைவடையலாம். சிலரில் குருதி உறைதல், பொட்டுக்கள் ஏற்படத் தொடங்கலாம். எனவே காய்ச்சல் காலப்பகுதியில் போதியளவு நீராகாரம் கொடுத்தல் இன்றியமையாதது. அத்துடன் பழச்சாறு மற்றும் பால்கொடுப்பது நீர்ச் சமநிலையைப் பேணுவதுடன் தேவையான கலோரியையும், சக்தியையும் அளிக்கிறது.

இக் காலப்பகுதியில் சிறுநீரின் அளவைக் கணிப்பதன் மூலம் நீர்ச்சமநிலையும் அவதானிக்கப்படல் வேண்டும். சிவப்பு நிற குளிர்பானம் மற்றும் உணவு வகைகளினை உண்பதைத் தவிர்த்தல் அவசியமாகும்.


ஏனெனில் நோயின் தாக்கத்தால் உருவாகும் வாந்தி, இரத்தம் கலந்ததா/ உட்கொண்ட உணவுப்பொருளினதா என வேறுபடுத்தி அறிதல் மிகக் கடினமாகும்.

Dengue Hemorrhagic காய்ச்சல் ஏற்படுமிடத்து கடுமையான வயிற்று நோ, குறிப்பாக வலது புறமாகவும், இக்காலப் பகுதியில் சிறுநீரின் வெளியேற்றமும் குறைவடையும். உட்பாகங்கள் மிகக்குளிராகவும், சோர்வடைந்தும் காணப்படலாம். குருதிப் பரிசோதனை செய்யுமிடத்து குருதிச் சிறுதட்டுக்களின் அளவும் குறைந்த நிலையில் காணப்படும். வெண்குருதிச் சிறுதுணிக்கையின் அளவு 4000$dl$ லும் குறைவாகவும் (சாதாரணமாக 4000$dl$ -11000$dl$) காணப்படுதல் டெங்குக் காய்ச்சலினை கண்டறிய உதவுகின்றது.

குருதிச்சிறுதட்டின் அளவு குறைதல் டெங்கின் தாக்கத்தினைக் காட்டும். எனவே நேரத்தை வீணாக்காது டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்போர் என சந்தேகிக்கப்படும் இடத்து அருகில் உள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். அத்துடன் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நோய் வருமுன் எம்மைப் பாதுகாத்திடலாம். சுற்றாடல் மற்றும் பொது இடங்களில் நீர் தேங்கியுள்ள பிரதேசங்களினை அப்புறப்படுத்தி நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

நுளம்புவலை, நுளம்புத்திரி மற்றும் உடலை முற்றும் போர்த்திய ஆடைகளை அணிதல் தனிநபர் ஒவ்வொருவரையும் பாதுகாத்திடும் வழிமுறையாகும். தாமதிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் நோயின் தாக்கத்தை அதிகரிப்பதால் சந்தர்ப்பத்தை தவறவிடாது வைத்தியசாலைக்கு விரைந்திடுவீர்.

B.சிந்துஜா
29ஆம் அணி.
மருத்துவபீட மாணவி



அடங்குவது டெங்கு என எழுந்திடுவோம்
தொடங்கிடுவோம் நுளம்பு ஒழிப்பினை இன்றே
தடமிடுவோம் நீர் தங்கி நுளம்பு பெருகுதல்தனை
புடமிடுவோம் எம்மிடத்தை புத்தொளிர்வுடன்
இடம்பலதேடி புல் பூண்டுகளை அழிப்போம்
இடம்கொடோம் டெங்கு இறப்பினை இங்கு

வைத்திய கலாநிதி C.S.யமுனாநந்தா

# தமிழ் சிறைக் கைதிகளின் கோரிக்கைகளினை நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்

## டாக்டர் ஜயலத்



(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடை மகசின் சிறைச்சாலையில் சந்தேகத்தின் பேரில் சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ்கைதிகள் 98 பேரின் உண்ணாவிரதப் போராட்டத்தை நேரில் காண்பதற்காக ஐக்கியதேசியக் கட்சி நிவாரண, மனித உரிமைகள் தொடர்பான உதவிச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினரு மான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று முன் தினம் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

இவருடன் நவசியல உறுமய தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சரத் மனமேந்தி, மேல்மாகாண சபை உறுப்பினர் பிரபா கணேசன் ஆகியோரும் சென்றிருந்தனர்.


சிறைச்சாலை முன் உண்ணாவிரதம் இருக்கும் சிறைக்கைதிகள் பத்துப்பேரைச் சந்தித்து உரையாடியபோது அவர்கள், எந்த வித வழக்கும் தொடரப்படாமல் சிறைவைக்கப்பட்டுள்ள தங்கள் பேரில் வழக்குத் தொடருமாறும் வழக்குத் தொடரப்பட்டுள்ள கைதிகளின் வழக்குக் காலத்தை தொடர்ந்து நீடிக்காது அவற்றை பரிசீலனைக்கு எடுக்குமாறும், எவ்வித குற்றமும் நிரூபிக்கப்படாதிருக்கும் கைதிகளை விடுதலை செய்வதற்கு முன்வருமாறும் தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன்போது டாக்டர் ஜெயலத் உண்ணாவிரதம் இருக்கும் சிறைக்கைதிகளிடம் தான் இது தொடர்பாக தமது பங்களிப்பை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் அது தொடர்பாக தமது செயற்பாட்டை மேற் கொள்வதாகவும் உறுதிகூறியுள்ளார்.

(2-6)

# பக்கச்சார்பாக செயற்படும் இலங்கை காவல்துறையினர்

## ரவூப் ஹக்கீம் அதிருப்தி



(கொழும்பு)

காவல்துறையினர் பக்கச் சார்பாக செயற்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரசார நடவடக்கைகளை சீர்குலைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படடு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் கல்முனையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கிலேயே காவல்துறை மா அதிபர் திடீரென கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி சுவ ரொட்டிகள் தொடர்பில் மட்டும் கல் முனை காவல் நிலையப் பொறுப்பதிகாரி தனது கடமையை அதிகமாகவே வெளிக்காட்டுவதாகவும் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும், ஆளும் கட்சி சுவரொட்டிகள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பதக்கமொன்றை இலக்கு வைத்தே அவர் இவ்வாறு செயல்படுவதாகவும் எதிர்வரும் 27ஆம்திகதி அவருக்கு அது வழங்கப்படும் எனவும் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார். (2-6)



இலங்கை மின்சாரசபையின் யாழ்.மாநகர பாவனையாளர் சேவை நிலையத்தில் டெங்கு ஒழிப்பிற்கான சிரமதானப் பணிகள் இடம்பெறுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

# வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் நாளை சனிக்கிழமை முதல் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தபால் மா அதிபர் எம்.கே.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தெரிவத்தாட்சி அதிகாரிகளின் ஊடாக தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட் டுள்ள குறித்த வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்தின் ஊடாக தபால் நிலையங் களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்காளர் அட்டைகளை தொகுதி வாரி யாக வேறுபடுத்தும் நடவடிக்கைகளை விரிவு படுத்தி நாளை சனிக்கிழமை அவற்றை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளன.


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோக நடவடிக் கைகள் எதிர்வரும் 18 ஆம் திகதியுடன் நிறை வடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி விடுமுறை தினமாக இருந்தபோதிலும் அன் றைய தினத்தை விசேட தினமாகப் பிரகடனப் படுத்தி வாக்காளர் அட்டைகள் விநியோகிக் கப்படவுள்ளதாகவும் தபால்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

(2-6)

# இலங்கைத் தமிழர் தொடர்பான பழிச்சொல்லில் இருந்துவிடுபடவே செம்மொழி மாநாடு — வைகோ

கோவையில் நடக்கவிருப்பது செம்மொழி மாநாடல்ல. அது கருணாநிதியின் விளம்பர மாநாடு. இது இலங்கை குறித்த விடயத்தில் தம் மீது பழிவந்துவிடும் என்ற பயத்திலே நடத்தப்படும் மாநாடு என்று ம.தி.மு.க. தொண்டர் படை மாநிலச் செயலாளர் சுரேஷ் குமார், உறுப்பினர் பொன். துரைபாண்டியன் ஆகியோரின் முதலாம் ஆண்டு நினைவு நாள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.



அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இயற்கையாக ஏற்படும் கடல் சீற்றம் காரணமாக ஏற்பட்ட அழிவையே இந்த மாவட்ட மக்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதைவிடக் கொடுமை இலங்கையில் உள்ள தமிழ் சமுதாயத்திற்கு நிகழ்ந்துள்ளது. இலட் சக்கணக்கான தமிழர்கள் அங்கு கொல்லப் பட்டார்கள்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிரு ந்த வேளையில் அதனை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள் ளவில்லை. மேலும் அங்கு தமிழர்கள் கொல்லப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் இல்லை.

இந்நிலையில் தமிழக முதலமைச்சர் அங்கு நடைபெறும் போரைத் தடுக்கும் நடவ டிக்கையில் ஈடுபட்டாரா? இல்லையா என்பது தெரியாது. ஆனால் அந்த பழிச் சொல்லில் இருந்து விடுபடத் தற்போது செம்மொழி மாநாட்டை நடத்தவிருக்கிறார்.

மேலும் இலங்கையில் ஒவ்வொரு தமிழ னும் சிந்திய இரத்தத்திற்கும் இந்திய அரசே பொறுப்பு. இனத்துரோகிகள் என்று குற்றம் சாட்டியதற்காக என் மீது ராஜதுரோக வழக்குப் போட்டார்கள். அதுவும் நான் பேசி ஆறு மாதம் கழித்து அதே குற்றச்சாட்டை இந்த மேடையிலும் நான் எடுத்துவைக்கிறேன் என்றார்.

(2-6)


# தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

## ஒப்பந்த வேலைக்கான விருப்பம் தெரிவித்தல்

தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு பின்வரும் வெளிநாட்டு உதவி நிதி மூலமான கருத்திட்டங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

| கருத்திட்டத்தின் பெயர் | நிதி மூலம் | உத்தேச செலவு (மில்லியன் ரூபா) |
|---|---|---|
| வடக்கு கிழக்கு மீள் கட்டுமான கருத்திட்டம் (நேர்ப்) | சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையும் ஐரோப்பிய ஒன்றியம் | 16,928.89 |
| வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி கருத்திட்டம் (நெக்டெப்) | ஆசிய அபிவிருத்தி வங்கியும், டச் அரசாங்கமும் | 3,983.00 |
| மீள் எழுச்சித்திட்டம் | உலக வங்கி | 7,284.00 |
| வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி கருத்திட்டம் –II (நெக்கொட்) | ஆசிய அபிவிருத்தி வங்கியும், சுவீடன் அரசாங்கமும் | 2,370.00 |
| வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி கருத்திட்டம் –II (நெக்கொட்) | ஆசிய அபிவிருத்தி வங்கி | 3,130.00 |
| வடக்கு கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தும் திட்டம் | உலக வங்கி | 9,500.00 |
| வடக்கின் அவசர மீட்பு கருத்திட்டம் | உலக வங்கி | 6,500.00 |

மேற்கூறப்பட்ட கருத்திட்டங்களை அமுலாக்குவதற்கு மிகப் பெரியளவிலான நிர்மாண வேலைகள் முன் எடுக்கப்படவுள்ளன.

**வேலைத்திட்டங்களின் விபரம்:-**

- அழிவடைந்த குடிநீர் விநியோக வழங்கல் திட்டங்களை மீள் நிலைக்குக் கொண்டு வருதல்
- கிராம வீதிகளை புனர் நிர்மாணம் செய்தல்
- நீர்ப்பாசனத் திட்டங்களை புனரமைத்தல்
- வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களினதும் அழிவடைந்த பொதுக் கட்டடங்களையும் பொதுச் சொத்துக்களையும் மீளமைத்தல்

இவ் அமைச்சு மேற்கூறப்பட்ட வேலைகள் தொடர்பிலான செயல்திட்ட அடிப்படையிலான கருத் திட்டங்களை மேற்கொள்ள ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அழைப்பாணை விடுக்கின்றது.

ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர் ஒப்படைக்க வேண்டியவை, அவர்களால் கடந்த காலங்களில் இதே மாதிரியான முன்வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்தமைக்கான சான்றுகள் அடங்கிய விபரம், இதே நிலையான அனுபவம், ICTAD தரம், தற்போது அமுலிலுள்ள ஒப்பந்த வேலைத்திட்டங்களின் விபரம், கருத்திட்ட முகாமை ஆளணி விபரம், வடிவமைப்பாளர், உடல் உள உழைப்பாளிகள், இயந்திர உபகரண, நிதி, இயலுமை போன்ற விபரமான தகவல்கள் தரப்பட வேண்டும்.

குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த ஒப்பந்தகாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இலங்கையின் கேள்வி விலை கோரல் வழிகாட்டிக்கமைவாகவும் ஏனைய நிதி முகவராண்மைகளின் கேள்வி விலை கோரல் வழிகாட்டிக்கமைவாகவும் முன் அனுபவ ஒப்பந்தகாரர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும்.

விபரத்தை தெரிவிக்கும் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 2010.02.05 ஆம் திகதியோ அதற்கு முன்னதாகவோ அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு:- *14.12.2009* திகதியன்று "Daily News" "தினகரன்" பத்திரிகையில் கேட்கப்பட்டதற்கிணங்க விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

**செயலாளர்,**
**தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு,**
**இல: 177, காலி வீதி,**
**கொழும்பு-03**

**தொலைபேசி:** +94-11-2382067
**தொலைநகல்:** +94-11-2382066
**மின்னஞ்சல்:** secmdrrn@sltnet.lk
**இணையப்பகுதி:** www.mnbd.org

(C-4158)


## வடபகுதி புனரமைப்பிற்கு

# 7.4 பில்லியன் ரூபாவை ஒதுக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

வடபகுதி அவசர புனரமைப்புத் திட்டத்துக்கு 7.4 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சர் என்ற வகையில் இதற்காக அமைச் சரவை பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். வட பகுதி அவசர புனரமைப்புத் திட்டத்துக்குத் தேவையான குறிப்பிட்ட தொகையை உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திப் பிரிவு கடனுதவியாக வழங்குகிறது.

இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியேற்றவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெ ழுப்பவும் அரசாங்கத்துக்கு உதவும் வகையில் இந்தக் கடனுதவி வழங்குவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

(2-6)

## பாகிஸ்தானிடமிருந்து

# 40ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கொள்வனவு

(கொழும்பு)

பாகிஸ்தானிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இன்று வரு கிறது.

தற்போது நிலவும் அரிசி தட்டுப் பாட்டை சீர் செய்வதற்காக மேற்படி அரிசி இறக்குமதி செய்யப்படுவ தாக வர்த்தக கூட்டுறவு மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள் ளார்.

மேற்படி அரிசி பாவனைக்கு உகந்ததான சர்வதேச எஸ். ஜி.எஸ். சான்றிதழுடன் பெறப் பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 9 விதி எண் : 3

### உடலமைப்பு

பிறந்த எண் 9 ஐயும் விதி எண் 3 ஐயும் கொண்டு பிறந்தவர்கள் செவ்வாய், குருவின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் ஆவர். இவர்கள் கம்பீரமான தோற்றமுடையவர்களாக இருப்பர்.

இவர்களின் பற்கள் வரிசையா கவும் அழகாகவும் காணப்படும். இவர்கள் உடல் பலம் கொண்டவர்களாக இருப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் மனபலம் கொண்டவர்களாக இருப்பர். எதற்கும் அஞ்சமாட்டார்கள். தாம் எண்ணும் கருத்துகளை துணிச்சலுடன் வெளியிட கூடியவர்கள் இவர்கள். கள்ளங் கபடமறியாதவர்கள்.

உள்ளொன்றும், வெளியில் மற்றொன்றுமாகப் பேசமாட்டார்கள். ஆனால், அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள். வீரதீரசாகசம் புரிவதில் வல்லவர்கள்.

தம் உயிர்போவதாக இருந்தாலும் தாம் நினைக்கும் காரியத்தைச் செய்து முடிப்பர். இவர்கள் எப்போதும் பொறுமையாகவோ நிதானமாகவோ இருக்க மாட்டார்கள். முன்கோபக்காரர்கள். பிறரிடம் கடுமையாக நடந்து கொள்வர்.

ஆனால் நியாத்திற்குப் புறம்பானவர்கள் அல்லர். நீதி நேர்மைக்குக் கட்டுப்பட்டவர். தமக்கு என்று குறிக்கோள் வைத்துப் பின்பற்றுவர்.

எதிலும் ஓர் ஒழுங்கு கட்டுப்பாடு கொண்டு நடக்கும் இலட்சியவாதி. அவ்வாறு பிறர் நடக்கவில்லை என்றால் தண்டனைக்குள்ளாக்குவர்.

இவர்களை யாராலும் எதிர்க்க முடியாது. அப்படி எதிர்ப்புகள் நேர்ந்து விட்டால் குறுக்கு வழியில் செயல்பட்டு அவர்களை அழிக்கும் துணிச்சல் மிக்கவர்.

இவர்கள் சிரித்து யாரும் பார்க்க முடியாது. அப்படிச் சிரித்துவிட்டால் ஆபத்துதான் ஏற்படும்.

இவர்கள் இவ்வளவு கடுமையானவர்களாக இருந்தாலும் தன்னைவிடப் பெரியவர்களுக்கும் மேதைகளுக்கும் மதிப்பு மரியாதை கொடுக்கத் தயங்க மாட்டார்கள். அதேபோல் தம்மைவிடக் கீழானவர்கள் தமக்கு மதிப்பு மரியாதை கொடுக்கவில்லை என்றால் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்.

இவர்கள் தம் சமூகம், மதம், நாடு போன்றவற்றின் முன்னேற்றத்திற்காக உழைப்பவர்களாகவும் அதற்காகத் உயிரை பணயம் வைப்பவராகவும் இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத்துணை நல்ல விதமாக அமையும். குழந்தை பாக்கியத்திற்கும் குறைவு இருக்காது. ஆனால் குடும்பத்தில் அடிக்கடி குழப்பங்களும் வீண் விவகாரங்களும் ஏற்படக்கூடும்.

இவர்களின் கண்டிப்பும், முரட்டுத்தனமும் பிறரின் வெறுப்புக்கும், பகைக்கும் ஆளாகக் கூடும்.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் விஞ்ஞானத் துறையில் அதிக ஆர்வம் கொண்டவர்கள். அத்துடன் இராணுவம், காவல்துறை, தீயணைப்புத்துறை போன்ற துணைகளில் ஈடுபாடு கொண்டிருப்பர். பெரிய தொழிற்சாலைகளில் உயரிய பதவியும், பலரை வேலை வாங்கும் அதிகாரியாகவும் இருக்கக்கூடும்.

இவர்கள் சட்டம், மருத்துவத்தில், அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பர். இவர்கள் காரசாரமாக எழுதுவதிலும், பேசுவதிலும் வல்லவர்களாக இருப்பர்.

திரவம் மற்றும் எண்ணெய் வியாபாரம் செய்தல், வீடு கட்டுதல், வண்டி வாகனம் போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டிருப்பர்.

இவர்கள் தம் தொழிலில் பெருமளவு சம்பாதித்து ஓர் உன்னத நிலைக்கு வருவர். ஆனால் வாழ்க்கையில் திருப்தி இருப்பது கடினம்.

### ஆரோக்கியநிலை

இவர்களுக்கு சிறுநீரகக் கோளாறும், மதுமேகம் என்னும் நீரிழிவு நோயும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

நரம்புத் தளர்ச்சியால் முதுகுவலி, இடுப்பு வலியும் ஏற்படும். வாய்வு சம்பந்த நோயும், சரும நோய்களும் ஏற்படும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் செவ்வாய், குரு, புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 9,3,5 ஆகிய தொடர்பிலான யோகமான பலனளிக்கும் எண்களுக்குத் தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 9,3,5 தொடர்பிலான யோகபுலன் கொண்ட எண்களிலேயே பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

இவர்களுக்கு 9,3,5 மற்றும் அவை தொடர்பிலான எண்களும் திகதிகளும் யோகமானவை.

ஆனால் இவர்களுக்கு சந்திரன், கேது ஆதிக்கத்திற்குட்பட்ட 2,7 மற்றும் அவை தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமற்றவை.

## உடல் எண் : 9 விதி எண் : 4

### உடலமைப்பு

பிறந்த எண் 9 விதி எண் 4 ஆகக் கொண்டவர்கள் செவ்வாய், ராகு இவர்களின் ஆதிக்கத்திற்குட்புட்டவர்கள். இவர்கள் சற்று உயரமானவர்களாகவும் எடுப்பான தோற்றத்துடனும் காணப்படுவர். இவர்களின் கண்கள் சிவந்து இருக்கக்கூடும். குரல் தடித்திருக்கும்.

### மன, குணவியல்பு

இவர்கள் அறிவுத்திறன் மிகுந்தவர்கள். ஒருவரைப் பார்த்தவுடனே அவரைப் பற்றி ஊகித்தறியும் ஆற்றல் மிக்கவர்கள். இவர்கள் உலக அனுபவம் பெற்றவர்களாகவும் இருப்பர்.

இவர்கள் மனபலம் கொண்டவர்களாக இருப்பர். பேச்சாற்றலும் பெற்றிருப்பர். இவர்கள் சமய சந்தர்ப்பத்திற்கேற்பப் பேச வல்லவர்கள். தம் பேச்சினாலேயே பல காரியங்களைச் சாதிக்க வல்லவர்கள்.

இவர்கள் எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். முன்கோபத்திற்கு ஆளாவதோடு கடுமையாகவும் அதிக சப்தத்துடன் பேசுவர்.

இதனால் இவர்களின் ஆரோக்கியத்திற்கே கேடு உண்டாகும். அதைப் பற்றிக் கூடக் கவலைப்பட மாட்டார்கள். கோபம் வந்துவிட்டால் இவர்கள் தம் நிலையையே மறந்து விடுவர்.

இவர்கள் சமயப்பற்றும் கடவுள் நம்பிக்கையும் கொண்டவர்களாக இருப்பர்.

இவர்கள் தம்மைவிடப் பெரியோர்களிடமும் உயர் பதவியிலுள்ளவர்களிடம் மிகவும் மரியாதையாக நடந்து கொள்வர். தம் ஆதரவில் இருப்பவர்களை அன்பாகவும் அனுசரணையாகவும் நடத்துவர். தம் விரோதிகளிடமும் மிகவும் இனிமையாக நடந்து கொள்வர்.

இவர்கள் பார்ப்பதற்கு முரட்டுத்தனமுள்ளவர்களாகவும் பேச்சு கடுமையாக இருந்தாலும் இவர்களிடமும் ஈவு இரக்கம் உண்டு. பிறர் கஷ்டப்படுவதைக் கண்டு சகிக்க மாட்டார்கள். வலியச் சென்று உதவி புரிவர்.

ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் அதை முடிக்காமல் விட மாட்டார்கள். அதனால் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுவதாக இருந்தாலும் கவலைப்பட மாட்டார்கள். தொடங்கிய வேலையை எப்படியும் முடித்துவிடுவர்.

இவர்கள் நல்லவர்கள் ; பிறரை ஏமாற்ற நினைக்க மாட்டார்கள். அதே சமயம் பிறர் தம்மை ஏமாற்றவும் விடமாட்டார்கள்.

இயற்கைக் காட்சிகளை ரசிக்க வல்லவர்கள். போட்டிப் பந்தயங்களில் பங்கு கொள்வர். போதைப் பழக்கத்திற்கு ஆளாகியிருப்பர். பெண்களின் தொடர்பு கொண்டவர்கள். இவர்களிடம் எல்லாவிதத் தீய பழக்க வழக்கங்களும் இருக்கும். ஆனால் ஒன்றில் கூட தீவிரமானவர்களாக இருக்க மாட்டார்கள்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத் துறை மனத்திற்கு இசைந்த வகையில் அமைவது கடினம். குடும்பத்தில் குழப்பமும் போராட்டங்களும் மிகுந்திருக்கும். வம்பு வழக்குகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் பொறியியல் மற்றும் மருத்துவத்திலும் ரண சிகிச்சையிலும், வழக்கறிஞராகவும் பிரசித்தி பெற்றிருப்பர்.

இவர்கள் இராணுவம், காவல்துறை, தீயணைப்புத் துறை போன்ற துணிகர வேலை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப்பர். எழுத்து மற்றும் பேச்சாற்றலாலும் பொருள் ஈட்டக் கூடும்.

இவர்கள் பெருமளவு சம்பாதிக்கக் கூடியவர்களாகவும், வீடு சொத்துச் சேர்ப்பவர்களாகவும் இருப்பர். இருந்தாலும் இவர்களுக்கு மனநிம்மதியுடன் சந்தோஷமான வாழ்க்கை அமைவது கடினம்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண மிகுதியால் மூலம், பவுத்திரம், இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களும், முதுகுவலி, மூட்டுவலி போன்ற எலும்பு மற்றும் நரம்பு சம்பந்த நோய்களும் ஏற்படக்கூடும். மதுமோகம் என்னும் நீரிழிவு நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் செவ்வாய், சுக்கிரன், புதன், சூரியன் ஆதிக்கம் பெற்ற 9,6,5,1 மற்றும் அவை தொடர்பிலான யோகப் பலன் தரும் எண்ணுக்குத் தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

இவர்களது நிறுவனங்களுக்கும் 9,6,5,1 தொடர்பான எண்களே யோகமானவை.

இவர்களுக்கு 9,6,5,1 தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமானவை.

ஆனால் சந்திரன், கேது ஆதிக்கம் பெற்ற 2,7 தொடர்பிலான எண்களும் திகதிகளும் யோகமற்றவை.

# இந்தியக் கடலில் கைதான இலங்கை மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டபோது இந்திய கடற்படையினரால் கைதான இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இம் மீனவர்களின் படகுகளும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 124 மீனவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

ஆந்திர கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 69 மீனவர்களும், சென்னைக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 43 மீனவர்களுமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதேவேளை சென்னை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட 11 மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சென்னையிலுள்ள இலங்கையின் பிரதி உயர் ஸ்தானிகர் வி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வெளி விவகார அமைச்சும், கடற்றொழில் அமைச்சும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாகவே இவ் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(2-4)

# வடக்கில் பாரிய அபிவிருத்தி திட்டங்கள்

## அமைச்சர் அநுர பிரியதர்ஷன தகவல்

(கொழும்பு)

வடபகுதி மக்களின் நலனுக்காகவும் அவர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டும் மஹிந்த சிந்தனையின் கீழ் அரசாங்கம் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருவதுடன் அதற்காக பெரும் தொகையான பணத்தையும் செலவிட்டு வருகின்றதென தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போது அதி பாதுகாப்பு வலயங்களை அரசாங்கம் நீக்கி வருகின்றது. வீதிகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அம்பாந்தோட்டை துறை முகத்துக்கு செலவிடும் தொகையைவிடக் கூடுதலான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று வடபகுதி மக்களின் மேம்பாட்டுக்காக அரசாங்கம் பில்லியன் கணக்கான ரூபாவை செலவிட்டு வருகின்றது என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (2-6)

## நூல் வெளியீட்டு விழா

மு. சிங்கராயர் எழுதிய *பாஷையூரும் நாட்டுக்கூத்தும்* நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் கலந்து சிறப்பிப்பதுடன் ஆசியுரையை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட் திரு. அ. யாவிஸ் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து நூல் வெளியீட்டுரையை திருமறைக்கலாமன்ற துணை இயக்குநர் ஆசிரியர் யோ. யோண்சன் ராஜ்குமார், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா. அகிலன் ஆகியோர் வழங்கவுள்ளனர். முதற்பிரதியை கலாபூஷணம் வ. அல்விறெட் பெற்றுக் கொள்ளவுள்ளார். (4)

# இத்தனை அவலத்திற்குப் பின்பும் வஞ்சம் தீர்க்கும் உங்கள் நெஞ்சில் ஈரம் பிறக்கவில்லையே

## கணபதி கனகராஜ் தங்கபாலுவிற்குக் கடிதம்

(கொழும்பு)

50 ஆயிரம் அப்பாவித் தமிழர் அளிக்கப்பட்ட மனிதப் பேரவலத்திற்குப் பின்பும் கூட உங்களின் வஞ்சம் தீர்க்கும் நெஞ்சத்தில் இரக்கம் என்பது சிறிது கூடப் பிறக்கவில்லையே? என்று இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் மத்திய மாகாண சபை உறுப் பினருமான கணபதி கனகராஜ் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.வி. தங்க பாலுவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற தீவிரவாத எதிர்ப்பு கருத்தரங்கில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் தங்கபாலு, இலங்கை தமிழர்கள் தான் ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என தெரிவித்த கருத்திற்கு ஆட்சேபனை தெரிவித்து அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதை மனித நேயமுள்ள எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதேநேரத்தில் ராஜீவ்காந்தியின் படுகொலைக்காக முழு இலங்கைத் தமிழர்களையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி அவமானப்படுத்துவதிலும் அர்த்தமில்லை.

இலங்கை இனப்பிரச்சினை அகிம்சை வழிப்போராட்டத்தில் இருந்து ஆயுதப் போராட்டமாக வடிவம் எடுத்த போது தமிழ் இளைஞர்களின் கைகளிலேயே துப்பாக்கிகளைத் திணித்தவர்கள் நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் ஆட்சி செய்த இந்திய அரசு தானே?யுத்த பயிற்சி முகாம்களை அமைத்து இலங்கையில் நடந்த சண்டைக்கு எண்ணெய் ஊற்றியதும் உங்கள் காங்கிரஸ் ஆட்சி தானே?

இந்திய அரசு ஏதோ இலங்கைத் தமிழர்களின் மீதுள்ள கரிசனை காரணமாக யுத்தம் செய்ய உதவுவதாகவும், உணவுப் பொதிகளை போடுவதாகவும் தமிழர்கள் நினைத்தார்கள். ஆனால் மேற்கு நாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த இலங்கை அரசை இந்தியாவின் கைப் பொம்மை அரசாக அடிமைப்படுத்தும் வரையில் தமிழர்கள் பகடைக்காய்களாக பயன் படுத்தப்படவேண்டும் என்பதுதானே இந்தியாவின் திட்டம் .

இந்திய அமைதி காக்கும் படையினர் வடக்கில் இருந்து வெளியேறி இந்தியா திரும்பிய போது அப்போது தமிழகத்தின் முதல்வராக இருந்தவரும் , இப்போது முதல்வராக இருப்பவரும் உங்கள் காங்கிரஸ் ஆட்சியின் அரசியல் பங்காளியுமான கலைஞர் கருணாநிதி அமைதி காக்கும் படையினரை நேரடியாகச் சென்று தன்னால் வரவேற்க முடியாதமைக்கு சொன்ன காரணங்களை ஒரு முறை நினைவு படுத்திப்பாருங்கள்.

இவையெல்லாம் சொல்வதன் மூலம் ராஜீவ்காந்தியின் படுகொலையை நியாயப் படுத்துவதாக அர்த்தப்படாது அந்த துன்பியல் சம்பவத்தினால் ஆத்திரமடைந்து கண்ணீர் விட்டுக் கதறிய, வேதனை அடைந்த இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்களின் இதயத்தில் இதுவரை அந்த சோகச் சுமை இருந்துகொண்டுதான் இருக்கிறது.

ராஜீவ்காந்தியை கொலை செய்தவர்களை தேடிப்பிடித்து தண்டனை வழங்கியிருக்க வேண்டும் இதை விடுத்து ஏன் ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுவதற்கு உறுதியளித்தீர்கள்? குடிப்பதற்கு பால் கூட இல்லாமல் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் இறந்து போவதை வேடிக்கை பார்த்தீர்கள்? பட்டினியால் இலட்சக்கணக்கானவர்கள் தவிர்ப்பதை பார்த்துக் கொண்டிருந்தீர்கள். காயப்பட்டவர்களுக்கு கடைசி வரையில் மருத்துவ வசதி வழங்கப் பட வில்லை. அப்பாவித் தமிழர்களை காப்பாற்றக்கோரி உலகமெல்லாம் உரத்த குரல் எழுப்பிய போதும் இந்தியா இதையெல்லாம் கண்டுகொள்ளவில்லையே என்று குறிப்பிட்டுள்ளார். (2-6)

## மேற்குலக நடவடிக்கைகளுக்கமையவே எதிரணிக் கூட்டணி - மைத்திரிபால -

(கொழும்பு)

இலங்கை அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தும் முகமாகச் செயற்படுகின்ற மேற்குலகத்தின் நடவடிக்கைகளுக்கு அமைவாகவே எதிரணிக்கூட்டணி செயற்படுவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலகத்திற்கு இலங்கைக்குள் தனது பேச்சினைக் கேட்டு செயற்படுவதற்கு ஓர் பொம்மை அரசாங்கம் தேவைப்படுவதாலும் அந்த பொம்மை அரசை நிறுவுவதற்கே மேற்குலகம் எதிரணி கூட்டணி மூலம் முயற்சிப்பதாகவும், அவ்வாறு மேற்குலகத்தின் சிந்தனைக்கு அமைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்படவில்லை எனவும் அவர்களின் கட்டளைக்கு இசைந்து கொடுக்காத ஜனாதிபதியை ஆட்சியிலிருந்து தூக்கி விட்டு அவர்களின் சொற்படி நடந்துகொள்ளும் ஓர் அரசை அமைப்பதற்கே மேற்குலகம் எதிரணி கூட்டமைப்பை உருவாக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## இலங்கைக்கான ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை நிறுத்தம் மிதிவண்டிகள் ஏற்றுமதியும் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை தற்காலிகமாக இடை நிறுத்த ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

இதனால் மிதிவண்டிகள் மற்றும் அவற்றின் உதிரிப்பாகங்களுக்கான ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு நிறைவு செய்துள்ளதொன்றும் அதனை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக்வும் ஆணைக்குழுவின் வர்த்தக விவகாரங்களுக்கான பேச்சாளர் கிறிஸ்டியன் ஹோமன் பிரஸல்ஸில் தெரிவித்தார்.

இதன்படி சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் மனித உரிமைகள் நிலையை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியுள்ளமை, ஐரோப்பிய ஒன்யத்தின் வர்த்தகச் சலுகைகளைப் பெறுவதற்கான அடிப்படைத் தகைமைகள் நிறைவேற்றப்படாமை மேலும் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசச் சட்டம், சித்திரவதைகளுக்கு எதிரான சட்டம், சிறுவர் உரிமைகள் பற்றிய சட்டம் ஆகிய ஐ.நா.வின் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் இலங்கை எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது போன்றன பற்றி ஐரோப்பிய ஆணைக்குழு விசாரணை நடத்தி வந்தது.

இதன்படி ஐரோப்பிய ஆணைக்குழு தனது உறுப்பு நாடுகளுடன் ஆராய்ந்த பின்னர் இலங்கைக்கான வர்த்தகச் சலுகைகளை தற்காலிகமாக இடை நிறுத்த முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

இதற்கமைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இன்னும் இரண்டு மாதங்களில் இது பற்றி இறுதி முடிவு எடுக்கவுள்ளன. இந்த நிலையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியிருந்த ஏற்றுமதி வரிச்சலுகைகளை இடை நிறுத்த முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2008இல் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு மிதிவண்டிகளை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தை வகித்தது. இதற்கமைய ஏறக்குறைய 7 இலட்சம் மிதிவண்டிகளை 2008இல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருந்தது.

இவற்றுக்கு ஐரோப்பிய நாடுகளின் இறக்குமதி வரி உள்ளிட்ட தீர்வுகள் எவையும் தற்போது விதிக்கப்படவில்லை. இதன் மூலம் 2008ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகை மூலம் 1.24 பில்லியன் யூரோவுக்கான ஏற்றுமதிகளை இலங்கை மேற்கொண்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-6)

## ராஜரட்ணத்திற்கு எதிராக மேலும் பல குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகர் ராஜ் ராஜரட்ணத்திற்கு எதிராக மேலும் பல குற்றச்சாட்டுக்களை அமெரிக்க அதிகாரிகள் முன்வைத்துள்ளனர்.

அமெரிக்க அதிகாரிகளினால் முன்வைக்கப்படும் இக்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமானால் இவர் 15 வருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டி வரும் என அமெரிக்காவின் நீதித்துறை தெரிவித்துள்ளது.

மேலும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ராஜ் ராஜரட்ணம் பிணையில் செல்வதாயின் 10 கோடி அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால் அவர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் பிணைத் தொகையைக் குறைக்குமாறு பல தடவை வேண்டுகோள் விடுத்துள்ளதோடு கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதும் அவர்கள் இக்கோரிக்கையை மீண்டும் முன் வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நெஞ்சை உருக்கும் நான்காம் ஆண்டு நினைவலைகள்

வித்தாக தாயின் மடியில்
1958
10
07

விதியின் சதியால் ஆண்டவன் அடியில்
2006
01
08



அமரர்
சின்னராசா இராசையா (சித்தப்பா)
[கிருஷிகேசன் வெதுப்பக ஊரிமையாளர்]

அன்பான வார்த்தைகளாலும்
அயராத உழைப்பாலும்
அனைவரையும் அரவணைத்து
அகிலத்தில் ஏற்றமுற வைத்த அப்பாவே!

பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிசமாய்
எங்கள் இதயத்தில் என்றும்
அணையாத் தீபமாய் சுடர் விசும்
எங்கள் அன்பு அப்பாவே!
ஆண்டு நான்கு சென்றாலும்
ஆறிடுமோ எம் துயர்

சின்னப்பிள்ளையார் கோவிலடி,
V.M றோட்,
(303) பருத்தித்துறை.

மீளாத்துயரில்
மகன், மனைவி.

# 2010 புத்தாண்டு பலன்கள்

## கன்னி

**(உத்தரம் 2, 3, 4 பாதங்கள், அத்தம், 1, 2 பாதங்கள் வரை)**

**புதிய பாதை புலப்படும் ஆண்டு!**

இனிமையாகப் பேசி எல்லோர் மனதிலும் இடம் பிடிக்கும் கன்னி ராசி நேயர்களே!

புத்தாண்டு பிறந்து புதிய திருப்பங்கள் பலவற்றையும் கொடுக்கப் போகிறது. முத்தான வாழ்வில் முன் உதாரணமாகத் திகழ்ந்த உங்களுக்கு இத்தனை நாட்களாக நடைபெற்று வந்த ஏழரைச் சனி இந்த ஆண்டு ஜென்மச் சனியாக நடைபெறுவதால், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது. சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். யாருடைய ஜாதகத்தில் செவ்வாய்ப் பலம் பெற்றிருக்கிறது என்பதை அலசி ஆராய்ந்து பாருங்கள். அவர்கள் பெயரில் வீடு கட்டத் தொடங்கினால் தான் வீடு வேகமாக கட்ட இயலும்.

வருடத் தொடக்கத்தில் சூரியன், புதன், சுக்ரன் மூன்றும் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கத் தொடங்குகின்றன. எனவே, ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். அடுத்தவர்கள் நலன் கருதி வாங்கிக் கொடுத்த தொகையும் அடுக்கடுக்காக வந்துகொண்டே இருக்கும்.

கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடியிருக்கும் வீடால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பெண் மக்களால் பெருமை சேரும். ஆயினும், ஜென்மச் சனியின் ஆதிக்கம் முதல் சுற்றாக இருப்பவர்களும், மூன்றாவது சுற்றாக இருப்பவர்களும் முறையாகப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இணைந்து செயல்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், பணிந்து வணங்கி, பரிகாரங்கள் செய்து யோக பலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்கும் சென்று வந்தால் ஆசைகள் அரங்கேறும்.

பெயரில் முறையில், எண்கணித அடிப்படையில், புதன் சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்சநிலை பார்த்து, அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால், வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். குருவிற்குரிய ஆண்டாகக் கருதப்படும் இந்த 2010 இல், குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் பதிகிறதோ, அந்தந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

### 1-1-2010 முதல் 30-4-2010 வரை

இக்காலம் உங்களுக்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய காலமாகும். ஏனென்றால், 6 இல் குரு சஞ்சரித்து ,சகட, யோகத்தை உண்டாக்கினாலும், சுகஸ்தானத்தில் விரயாதிபதி அல்லவா வீற்றிருக்கிறார். எனவே, ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்பட்டு அகலும்.

ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலமும், அப்போதைக்கு அப்போது மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவதன் மூலமும் ஆரோக்கியத்தை சீராக வைத்துக் கொள்ள இயலும்.

எந்தவொரு காரியத்தையும் தொகையை வைத்துக் கொண்டு செய்ய இயலாது. அது பெரிய காரியமாக இருந்தாலும் சரி, சிறிய காரியமாக இருந்தாலும் சரி, காரியத்தைத் தொடங்கினால், காசு பணம் தானே கைகளில் புரளும்.

செவ்வாய் நீச்சம் பெறுவது ஒரு வழிக்கு யோகம் தான். 3, 8 க்கு அதிபதி நீச்சம் பெற்றால் விபரீத ராஜயோகம் செயல்படத் தொடங்கும். எனவே, ஒத்துவராத உடன் பிறப்புகள் ஒத்து வருவர். அவர்கள் வழியில் கொடுத்த தொகை வந்து சேரும்.

பூர்வீக சொத்துக்களில் உங்களுக்குக் கிடைத்த பங்குடன், அவர்களுக்குக் கிடைத்த பங்கையும் உங்களிடமே விற்று, அதற்கான தொகையை அவர்கள் பெற்றுக் கொள்வர். வியாபார விருத்தி அதிகரிக்கும் இந்த நேரத்தில் போட்டிக் கடைகளும் உருவாகலாம்.

சனி வக்ர கதியில் இயங்குவதால், திடீர் திடீரென திட்டங்கள் மாறலாம். சிந்தனைகளும் மாறலாம். ஒரு காரியத்தைப் பாதியிலேயே விட்டுவிட்டு மற்றொரு காரியத்தைத் தொடங்குவீர்கள். ஈஸ்வர வழிபாட்டை மேற்கொண்டால் வக்ரகாலமும் வளர்ச்சியான காலமாக மாறும்.

### 1-5-2010 முதல் 31-8-2010 வரை

இக்காலத்தில் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். வெளி வட்டார பழக்க வழக்கம் விரிவடையும். கூட்டு முயற்சிகளில் மாற்றங்கள் ஏற்படும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்க முயற்சிப்பீர்கள். 4, 7 க்கு அதிபதி கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ர கதியில் இயங்கும் பொழுது மிகுந்த யோகங்களையே வழங்கும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

தெய்வ வழிபாடுகளில் ஆர்வம் கூடும். வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேர்வர்.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் அதன் பார்வை உங்கள் ராசியின் மீதும், 3 மற்றும் 11 ஆம் இடங்களிலும் பதிவாகிறது. குரு சந்திரனைப் பார்த்து குருச்சந்திர யோகத்தை உண்டாக்கும் பொழுது ஏற்படும் பலன்கள் யாவும் இப்பொழுது உங்களுக்கு உருவாகும்.

வளர்ச்சி மீது வளர்ச்சி கூடும். வங்கிச் சேமிப்பு உயரும். தளர்ச்சி குறையும். தன்னம்பிக்கை கூடும். முயற்சி செய்த காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைப்பது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

மூன்றாம் இடத்தைப் பார்க்கும் குருவால் முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மீண்டும் பழைய நிலையை அடைய எடுத்த முயற்சி வெற்றி பெறும். சகோதரிகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். வழக்குகளில் வெற்றி கிட்டும்.

பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவுக்கு வரும் அதே நேரத்தில் செவ்வாயும், சனியும் இணைந்து கன்னி ராசியில் சஞ்சரிக்கப் போவதால் ஆரோக்கியத்தைச் சீராக வைத்துக் கொள்வது உங்கள் புத்திசாலித் தனமாகும்.

வாகன மாற்றம் செய்தால் விபத்துக்களில் இருந்து தப்பிக்கலாம். கூட்டாளிகளால் ஏமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்க அவ்வப்போது கணக்குகளைப் பார்த்துக் கொள்வது நல்லது. குருவின் பார்வை பலத்தால் லாப ஸ்தானம் புனிதமடைவதால் வருமானத்திற்குக் குறைவிருக்காது. லாபம் எதிர்பார்த்தபடி வந்துசேரும்.

உங்கள் இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ளப் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். அந்நிய தேசத்தில் இருந்து அழைப்புகள் வந்து சேரலாம். இளைய சகோதரர்களால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். நன்மைகளை நாளும் சந்திக்கப் பார்க்கும் குருவைப் பலப்படுத்துவது நல்லது. எனவே குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டால் எல்லையில்லாத நற்பலன்கள் ஏற்படும்.

### 1-9-2010 முதல் 31-12-2010 வரை

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். சனி வக்ர நிவர்த்தியாகிவிட்டார். எனவே நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.. பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

காவல் துறையால் ஏற்பட்ட கலக்கம் அகலும். ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு காரியம் முடிவடைந்து அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். தொழில் வளம் மேலோங்கும். பூர்வீக சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்களை வாங்குவீர்கள்.

வருடக் கடைசியில் கூட்டுக்கிரக யோகம் செயல்படப் போகிறது. செப்டம்பர் 22 ஆம் திகதி செவ்வாய், சுக்ரச் சேர்க்கையும், அக்டோபர் மாதத்தில் புதன், சுக்ரன், சூரியன் மூன்றும் துலாம் ராசியில் சஞ்சரிப்பதும் யோகம் தான்.

கூட்டணியின் மூலம் வெற்றி பெறுவது போல கூட்டுக்கிரக யோகத்தின் மூலம் நீங்கள் எதிர்பார்த்த காரியங்களில் வெற்றியடைவீர்கள். நீண்ட நாளைய வழக்கு நல்ல முடிவிற்கு வரும். நிலபுலன்களை வாங்கிச் சேர்க்கும் அமைப்பு உருவாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

இராசிநாதன் புதனைப் பலப்படுத்தவும், ராசியில் சஞ்சரிக்கும் ஜென்மச்சனியால் சிக்கல்கள் ஏற்படாதிருக்கவும் நின்ற கோலத்து விஷ்ணுவை வழிபட்டு வாருங்கள். அனுமனுக்கு ராமஜெய மாலையைச் சூட்டுங்கள்.

வருடத் தொடக்கத்தில் கன்னி ராசியில் பிறந்த பெண்களுக்கு ஜென்மச் சனியின் ஆதிக்கத்தால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு

**சிவல்புரி சிங்காரம்**

அகலும். அனுமன் வழிபாட்டால் அவற்றில் இருந்து விடுபடும் வாய்ப்பு கிட்டும். விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். இதுவரை கசந்த காலமாக இருந்த வாழ்க்கை மே மாதத்திற்கு மேல் வசந்த காலமாக மாறும். புகுந்த வீட்டில் உங்கள் செல்வாக்கு உயரும். செவ்வாய், சனி சேர்க்கைக் காலத்தில் மட்டும் யாரையும் நம்பிச் செயல்படுவது அவ்வளவு நல்லதல்ல.

குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளலாம். சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் நற்பலன் காண சர்ப்ப சாந்திகளை யோகபலம் பெற்ற நாளில் செய்து கொள்வது நல்லது.

(தொடரும்)

---

## பொலிஸாரின் குறைபாடுகள் காரணமாகவே கைதிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது

### கொழும்பு பிரதான நீதவான்

(கொழும்பு)

பொலிஸ் தரப்பினரின் குறைபாடுகள் காரணமாகவே சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக கொழும்பு பிரதான நீதவான் சம்பா ஜானகீ ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்படும் நபர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதில் பொலிஸார் அசமந்தமான போக்கைப் பின்பற்றுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளதுடன் இதன் காரணமாக விளக்கமறியல் சிறைச்சாலைகளில் அதிகளவான சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு வழக்குத் தொடரப்படாத நிலையில் அதிக எண்ணிக்கையிலான சந்தேக நபர்கள் தேவையற்ற அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இதற்கமைய இவர்கள் தொடர்பான விசாரணைகள் ஏன் தாமதப்படுத்தப்படுகின்றன என்பது தொடர்பில் விளக்கமளிப்பதற்கு இரகசிய பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சிவகுணநாதன் சந்திரசேகரன், பழனிசாமி விநோதன், சுப்பையா பாசு, சம்பத் சமன்ஜித் ஆகியோர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இதுவரையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மனு மீதான விசாரணைகளின் போதே நீதவான் பொலிஸாரை இவ்வாறு கடுமையாக சாடியுள்ளதாக தெரிகிறது.

(2-6)

---

## பிரதமர் பதவி தொடர்பில் பிரதான எதிர்க்கட்சிகளுக்கு இடையில் முரண்பாடு

(கொழும்பு)

பிரதமர் பதவி தொடர்பில் பிரதான எதிர்க்கட்சிகளுக்கு இடையில் முரண்பாடு காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் வெற்றியீட்டினால், பிரதமர் தெரிவு தொடர்பில் சிக்கல் நிலை ஏற்படக்கூடுமென சுட்டிக் காட்டப்படுகிறது.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு ஆகியன வெவ்வேறு நபர்களை பிரதமர் பதவிக்காக பரிந்துரை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வாக்காளரின் பரம்பல் மற்றும் கட்சி அளவு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு இந்த பதவி வழங்கப்பட வேண்டுமென அந்தக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும் பிரதமர் பதவியை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவிற்கு வழங்கப்பட வேண்டுமென ஜே.வி.பி. கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் முன்னாள் இலங்கையின் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கவிற்கு பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டுமென மங்கள சமரவீர தரப்பினர் வலியுறுத்தி வருவதாகவும் ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளிடையே நிலவி வரும் இந்த முரண்பாடு குறித்து ஜெனரல் சரத் பொன்சேகா அதிருப்தி வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(2-6)

---

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வல்வை ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு வல்வை தென் மேற்கு கிராமசேவையாளர் அலுவலகத்தில் வல்வை ஒன்றியத் தலைவர் மு. தங்கவேல் தலைமையில் நடைபெறவுள்ளதாக மேற்படி ஒன்றியச் செயலாளர் தெரிவித்துள்ளார். (4)

தூய்மையான மனச்சாட்சி இடி முழக்கத்திலும் அச்சமின்றித் துயிலும்

– நாமஸ் முல்லர்

# நடமாடிய எங்கள் ஞானகுரு சாமி விஸ்வநாதக்குருக்கள்

'அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால்' என்பது வள்ளுவன் கண்ட முடிபு.

அந்தணர்கள் உயிர்க்கொலை வெறுத்தவர்கள். அவர்கள் சீவனைச் சிவனாக்கும் இறை பக்குவம் மிகுந்தவர்கள்.

உலகெங்கும் இருக்கக்கூடிய மதங்களில் இந்து மத சிவாச்சாரியர்கள் மட்டுமே புலால் உண்ணா புண்ணிய சீலர்கள். இதனால் அன்றோ அவர்கள் அறங்காக்கும் அற்புதப்பணியை செம்மையாகச் செய்கின்றனர்.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி எல்லா உயிரும் தொழும்' என்று வள்ளுவன் குறிப்பிட்டது கூட அந்தணர்களைத்தான் என்று கூறுவது தவறாகாது.

இத்தகைய சிறப்புக்கள் மிகுந்த அந்தணர்களுக்காக வானம் மழை பொழிந்து இந்த வையகத்தை வாழ்விக்கின்றதென வேதங்கள் இயம்புகின்றன.

எனவே உலகெங்கும் இருக்கக்கூடிய மதங்களில் இந்துசமய சிவாச்சாரியார்கள் மாமிசம் புசிக்கா தவம் செய்வதால் அவர்களைத் தொழுவது இறைவனைத் தொழுவதற்கு ஒப்பானதாகும்.

அவ்வகையில் எங்கள் மண்ணில் அந்தண சிரேஷ்டராக விளங்கிய சாமி விஸ்வநாதக் குருக்களை நேரில் கண்டவர்கள் தம்மை அறியாமலே கரம் கூப்பித் தொழுவர்.

நிறம், முகப்பொலிவு, கண்களின் ஞானவொளி அனைத்தும் கைலாயத்தில் வீற்றிருந்து நமை ஆளும் பரம்பொருளே எழுந்து வருவது போலக் காட்சி தரும் இறைவன் எப்படி இருப்பான் என எம்மால் கூறமுடியாதாயினும் இறைவன், சாமி விஸ்வநாதக்குருக்களின் வடிவில் இருப்பான் என்று கூறுமளவிற்கு தெய்வத் திருவுருவாக விஸ்வநாதக் குருக்கள் ஐயா விளங்கினார்.

சிவபூசையில் திளைத்த திருமேனி, குட முழுக்குகள் நடத்திய ஞான அருள் ஒளி, மகோற்சவங்கள் நடத்திய முகத்தேயஸ்து என எல்லாமும் ஒருங்கிணைந்து ஞானகுருவாக நம் மண்ணில் நடமாடிய சாமி விஸ்வநாதக்குருக்கள் அவர்கள் இந்த மண்ணை விட்டேகினார் என்ற செய்தி நெஞ்சை வருத்துகிறது.

சமயத்தால், இறைவழிபாட்டால் எங்களை ஆற்றுப்படுத்திய ஞானகுருவை நாம் இழந்து விட்டோம். 'பொருளாதாரம் தேடல்' என்ற பேச்சுக்கே இடமில்லாமல் தெய்வீகத் திருவருளை வையகத்தில் வாழவைத்த எங்கள் விஸ்வநாதக்குருக்கள் ஐயா, கூத்தபிரானின் திருவடிகளில் வீற்றிருந்து எங்களை ஆசீர்வதிப்பாராக.

# டெங்கை கட்டுப்படுத்த ஒத்துழையுங்கள்! யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது டெங்கு காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதால், இந் நோயைக் கட்டுப்படுத்த அனைத்து வர்த்தக உரிமையாளர்களும், வர்த்தக ஊழியர்களும் தங்களது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கவேண்டுமென யாழ். வணிகர் கழகம் கேட்கின்றது.

இதற்கமைய வர்த்தக நிலையத்தில் பாவிக்கப்படாத பொருட்கள் யாவும் அகற்றப்பட்டு தினமும் சுத்தமாக அவ்விடத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் தண்ணீர் பீலிகளில் நீர் தேங்காதவாறும் மற்றும் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடிய சகல பொருட்களையும் உடனடியாக அகற்றப்பட்டு தண்ணீர் எந்தவகையிலும் தேங்காதவாறும் அத்துடன் அருகிலுள்ள கழிவு நீர் வடிகால்களில் நீர் தேங்காதவாறும் பார்த்துக் கொள்வதற்கு விசேடமாக உணவகங்கள் உணவுப் பண்டங்களை மூடியும், கழிவு நீரை முறைப்படி அகற்றியும் டெங்கு நுளம்புகள் பெருகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அதன் ஊழியர்களும் வர்த்தக நிலையத்தையும் அதன் சுற்றாடலையும் துப்புரவு செய்து அதன் கழிவுகளை குப்பை அகற்றும் வாகனங்கள் மூலம் வெளியே அகற்ற வேண்டும் எனவும், குடா நாட்டு மக்களுக்கு மேலும் டெங்கு நோய் பரவாமலும் அதனை கட்டுப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பை வர்த்தகர்கள் வழங்கவேண்டுமென்றும் யாழ். வணிகர் கழகம் வர்த்தக நிலைய உரிமையாளர்களை கேட்டுள்ளது. (ச-2-6)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த காரைநகரில் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயைக்கட்டுப்படுத்தும் பிரசார நடவடிக்கைகளில் காரைநகர் செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர். காரை நகர் செஞ்சிலுவைச்சங்க தொண்டர்களும் இளைஞர் வட்ட உறுப்பினர்களும் அப்பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகருடன் இணைந்து வீடுவீடாச் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வீட்டுச்சுற்றுப்புறங்களை அவதானித்து வீட்டு உரிமையாளர்களுடன் கலந்துரையாடி வீட்டுச் சுற்றுப்புறங்களை சுத்தப்படுத்துவதற்கான அறிவுரைகளையும் ஊக்கங்களையும் அவர்கள் ஏற்படுத்தி வருகின்றார்கள். இச்செயற்பாடுகளுக்கு மீளக்குடியமர்ந்த மக்கள் போதிய ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இந்நடவடிக்கைகள் தொடர்ந்து வார இறுதிவரை முன்னெடுக்கப்படுமென பிரிவின் தலைவர் தெரிவித்தார்.

இச்செயற்பாடுகளுக்கான முன் அறிவித்தல்கள் பொது மக்களுக்கு பிரசித்திபெற்ற ஈழத்துச் சிதம்பர இரதஉற்சவ தினத்தன்றும் தீர்த்தத் திருவிழாவின்போதும் தொண்டர்களால் பிரசுரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டது. (ச)

# இறுப்பிட்டி வீதியை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு இறுப்பிட்டி வீதியை புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். அவ்வீதியின் முதல் 30 கிலோமீற்றர்கள் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் கூறினார். சுமார் 25 வருடங்காலமான புனரமைக்கப்படாத நிலையில் இவ்வீதி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# நடராஜர் படம் வைக்கும் திசை

மற்ற எல்லா சுவாமிகளின் படத்தையும் கிழக்கு நோக்கி வைக்க வேண்டும். ஆனால் , நடராஜர் படத்தை மட்டும் தெற்கு நோக்கி அமைக்க வேண்டும். எமனையும் வென்றவர் என்பதைக் குறிக்கும் வகையில் தெற்கு நோக்கி நடராஜர் படத்தை வைப்பார்கள்.

# வெள்ளி நற்சிந்தனை

# பக்தியின் மொழி தமிழ் 105

எம்மை நாமே நல்வழிப்படுத்தும் முறை ஒன்றை மெய்யடியார்கள் கூறிச்சென்றுள்ளனர். எமது நெஞ்சத்தை முன்னிலைப்படுத்தி அறிவுரை செய்யமுடியும். கல்வியால் பெற்ற அறிவும் இறை பற்றிய சிந்தனையும் இதற்குத் துணையாக நிற்கும். நாயன்மார் தமது பாடல்களிலே இத்தகைய வழிபாட்டைச் செய்துள்ளனர். தவறு செய்தவர் தம்மைத் தாமே திருத்திக் கொள்ள முடியும்.

சுந்தரருடைய வாழ்வியல் அனுபவம் இத்தகையதே. பரவையாருக்குக் கூறிய உறுதி மொழியை மறந்தமை அவர் செய்த பெரிய தவறாகும். அந்தத் தவறு நேர்வதற்குக் காரணம் இறைவனை மறந்தமையே எனச் சுந்தரர் நன்கு உணர்ந்துகொண்டார். எனவே தன் நெஞ்சத்தை வழிப்படுத்த முனைகிறார். திருக்கோயிலுக்குச் சென்று இறைவழிபாட்டிலே ஈடுபடும்படி நெஞ்சத்திற்கு அறிவுரை செய்கிறார். அதனால் இறைவன் உறையும் திருக்கோயிலின் சூழல் பற்றி எடுத்துரைத்து அந்த அழகிலே முதலில் நெஞ்சத்தை ஈடுபட வைக்கிறார்.

கோட்டாற்றங்கரையின் அருகில் அமைந்திருக்கும் அழகிய திருத்தலம் கொச்சைவயம். இயற்கையின் அழகு கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ள தலம் ஆற்றின் ஓட்டத்தால் மேலும் அழகுபெற்றுப்பொலிகிறது. ஆற்றங்கரையிலே நின்று பார்க்கும்போது காணும் காட்சிகள் நெஞ்சத்தைக் குளிர்விக்கும் தன்மை கொண்டவை. இறைவனின் அற்புதமான படைப்பின் திறத்தைப் பறை சாற்றி நிற்பன. ஏலம், இலவம் பல்வேறு இனத்து மலர்கள் என இயற்கையின் கொடைகளை ஆற்று நீர் சுமந்து ஓடி வருகிறது. அழகிய சிறிய மிளகொடு பழுத்த கனிகளையும் கொன்றை மலர்களையும் உந்தி வருகிறது. வயல்களிடையே ஆற்றுநீர் புகுந்து பரவி நகர்ந்து வருகிறது. இந்த ஆற்றின் பெருகிய ஓட்டத்தின் அழகு இயற்கையின் ஓர் இனிய கோலம். இக்கோலம் காண்பவர் நெஞ்சத்தைக் கொள்ளை கொள்ளும்.

சுந்தரர் நெஞ்சத்தை இந்தக் காட்சிகளைக் காணும்படி எடுத்துக் கூறும் பாங்கு ஓர் உல்லாசப் பயணியை ஆற்றுப்படுத்துவது போல உள்ளது. இயற்கையை ஊன்றிக் கவனிக்கும் பயிற்சியை எல்லோருக்கும் ஊட்ட விரும்புகிறார். வளமான சூழலில் அமைந்த திருக்கோயிலின் சுற்றுப்புற அழகைக் காண எல்லோரையும் அவர் அழைப்பது போலப் பாடல்களைப் பாடியுள்ளார். இத்தகைய அழகான சூழலிலே குடிகொண்டு அருள் புரியும் இறைவன் கோலத்திலும் அழகைக் காண்பதற்கு வழி காட்டுகிறார். 'கறைக்கண்டம்' இறைவனின்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பவளம் போன்ற மேனிக்கு அழகூட்டி நிற்பதைக் குறிப்பாய் எடுத்துரைக்கின்றார். திருத்தலத்திலே சிவன் விரும்பியுறைவதாகப் பாடியுள்ளார். 'நீலமார் கண்டனை நினை மட நெஞ்சமே' எனத் தனது நெஞ்சத்திற்குக் கூறுகிறார். இங்கு அவர் தனது நெஞ்சத்தை மடநெஞ்சமே என விளிப்பது கவனிக்கத் தக்கது. இறைவனை மறந்து உலக இன்பங்களிலே நெஞ்சம் ஈடுப்பட்டத்தை நினைத்துப் பார்க்கிறார். அத்தகைய உலக இன்பங்களைப் பற்றி இனிமேல் நினைத்துப் பார்க்காமல் நீலகண்டனையே நினைத்து வாழவேண்டும் என நெஞ்சிற்கு எடுத்துரைக்கின்றார்.

இறைவன் நினைப்பால் தவறு செய்தமையால் அச்சத்தோடு வாழ்பவர் அச்சம் தீரும் என்பதே சுந்தரருடைய நம்பிக்கையாகும். இது அவருடைய சொந்த வாழ்வியல் அனுபவம். எனவே அதனைப் பாடலிலே எல்லோருக்கும் கூறுகிறார்.

**'ஏலமார் இலமொடு இனமலர்த்தொகுதி எங்கும் நுந்தி**
**கோலமா மிளகொடு கொழுங்கனி கொன்றையுங் கொண்டு**
**கோட்டாறு**
**ஆலியா வயல்புகு மணிதரு கொச்சையே நச்சிமேவும்**
**நீலம் ஆர்கண்டனை நினைமட நெஞ்சமே யஞ்சல் நீயே'**

## கையடக்கத் தொலைபேசி பாவனை

# அல்சைமர் நோயிலிருந்து பாதுகாக்க உதவுகின்றது

## அமெரிக்க ஆய்வாளர்கள்

கையடக்கத் தொலைபேசி பாவனை அல்சைமர் நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள உதவுவதாக அமெரிக்க ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொதுவாக கையடக்கத் தொலைபேசி பாவனையின் மூலம் பல்வேறு நோய்கள் ஏற்படக் கூடுமென்பதே பரவலான கருத்தாக அமைந்துள்ளது.

எனினும், முதல் தடவையாக கையடக்கத் தொலைபேசி அல்சைமர் என்ற ஞாபகமறதி நோயைக் கட்டுப்படுத்த உதவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எலிகளுக்கு நடத்தப்பட்ட சோதனையின் மூலம் இந்த உண்மை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசி அலைகளினால் மனித மூளைக்கு பாதிப்பு ஏற்படுவதாக முன்னைய ஆய்வுகள் சுட்டிக்காட்டியிருந் தன.

எனினும், கையடக்கத் தொலைபேசி அலைகளினால் அல்சைமர் நோயினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை தடுக்க முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்டகால ஆய்வின் பின்னர் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் புளொரிடா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (6)



ஸ்கொட்லாந்தில் ஏற்பட்ட கடும் பனிப்பொழிவு காரணமாக வீதிகளில் பனி சூழ்ந்துள்ளது.....

# 13.2 பில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட நட்சத்திரக் கூட்டம்


## புகைப்படங்கள் வெளியீடு

அமெரிக்கா நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் *ஹபிள்* விண்வெளி தொலைக் காட்டியானது இதுவரை ஒரு போதும் அவதானிக்கப்படாத நட்சத்திரக் கூட்டங்களின் தோற்றப்பாட்டை படமாக்கியுள்ளது.

தொலை தூரத்திலுள்ள நட்சத்திரங்களிலிருந்து ஒளி பூமியை வந்தடைய பல பில்லியன் ஆண்டுகளை எடுத்துக்கொள்கிறது.

இதற்கமைய 13.2 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நட்ச்தத்திரக் கூட்டங்களிலிருந்து வெளிப்பட்ட ஒளியை ஹபிள் தொலைக் காட்டி படமாக்கியுள்ளது. இது உலகம் தோன்றுவதற்கு காரணமாக இருந்த பிரளயம் ஏற்பட்டு 600 மில்லியன் முதல் 800 மில்லியன் வரையான காலத்திற்கு பின் நிகழ்ந்த ஒன்றாகும்.

இந் நிலையில் ஹபிள் தொலைக்காட்டியின் புதிய வைட் பீல்ட் புகைப்படக் கருவி 3' இந்த அரிய நட்சத்திரக் கூட்டத்தின் புகைப் படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது.



இப் புகைப்படங்கள் நேற்று முன்தினம் வோஷிங்டன் நகரில் இடம்பெற்ற அமெரிக்க விண்வெளியியியல் சபையின் 215 ஆவது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. (6)



தஞ்சை மாவட்டம் திருவையாறில் நடைபெற்ற தியாகராஜரின் 163ஆவது ஆராதனை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பஞ்சரத்ன கீர்த்தனையில் 500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பாடி இசை அஞ்சலி செலுத்தினர்.

# பயங்கர தீவிரவாதி தாவூத் இப்ராகிம்

## அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)

மும்பையில் நிழல் உலக தாதாவாக வாழ்ந்தவன் தாவூத் இப்ராகிம். மும்பையில் 17 ஆண்டு களுக்கு முன்பு தொடர்குண்டு வெடிப்பு நடத்தி 260 பேர் பலியாக காரணமான இவன் பின் பாகிஸ்தானுக்கு ஓடிச் சென்று அங்குள்ள கராச்சி நகரில் தலை மறைவு வாழ்க்கை நடத்தி வருகிறான்.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப் புகளுக்கு பணம் விநியோகம் செய்வதுடன் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. யுடனும் இவனுக்கு தொடர்பு இருக்கிறது. இவனை ஒப்படைக்கும்படி இந்தியா பல தடவை கேட்டுக்கொண்டபோதும் பாகிஸ்தான் தலைவர்கள் அனைவரும் தாவூத் இப் ராகிம் எங்கள் நாட்டில் இல்லை என்று கூறி வருகிறார்கள்.

பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் மியாண் டட்டின் சம்பந்தியாகி உள்ள இவ னது நடவடிக்கைகளை அமெரிக்க உளவுத் துறை ரகசியமாகக் கண்காணித்தது. தற் போது தாவூத் இப்ராகிமை பயங்கர தீவிர வாதியாக அமெரிக்கா அறிவித்துள்ளது. தெற் காசியாவில் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு தாவூத் அச்சுறுத்தலாக இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கையில், தாவூத் இப்ராகிமின் நாச வேலை கும்பலில் பாகிஸ்தான், இந்தியா, அரேபியா நாடுகளில் சுமார் 5 ஆயிரம் பேர் உள்ளனர். அவர்கள் அனைவரும் பாகிஸ் தான் தீவிரவாதிகள் மற்றும் ஐ.எஸ்.ஐ.யுடன் தொடர்பில் உள்ளனர். இந்த கூட்டணி அபாய கரமானது என்று கூறப்பட்டுள்ளது. (2-6)

# ரஷ்ய பொலிஸார் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

## 6பேர் பலி ; பலர் காயம்

ரஷ்யாவில் உள்ள டைகாஸ்டாஸ் பகுதியில் அரசுக்கு எதிராக தீவிரவாத இயக்கம் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் தலைவரை 5 நாட்களுக்கு முன்பு பொலிஸார் சுட்டுக்கொன்றனர்.

இதற்கு பழிவாங்கும் வகையில் தீவிரவாதிகள் பொலிஸ்ார் மீது திடீர் தாக்குதல் நடத்தினார்கள்.

அங்குள்ள காசாஸ் நகரில் போக்குவரத்து சோதனைசாவடியுடன் கூடிய பொலிஸ் நிலையம் ஒன்று உள்ளது. தற்கொலைப் படை தீவிரவாதி ஒருவன் வெடிகுண்டு நிரப்பிய லொறியை சோதனைச் சாவடி பொலிஸ் நிலையம் மீது மோதி வெடிக்கச் செய்தான்.

இதில் 6 பொலிஸார் உயிர் இழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். சோதனைச் சாவடியில் நின்றிருந்த கார்கள் மற்றும் ஏராளமான வாகனங்களும் சேதமடைந்தன. இந்தப் பகுதியில் கடந்த ஓகஸ்ட் மாதம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# சீனாவில் நிலக்கரி சுரங்க தீ விபத்தில் 25 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் மத்திய பகுதியில் உள்ள ஹுனான் மாநிலத்தில் ஷியாங்டான் நகரில் உள்ள லீஷெங் நிலக்கரி சுரங்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை திடீர் என்று தீப்பற்றி கொண்டது. தரைக்கு அடியில் செல்லும் கேபிலில் தீப்பிடித்தது தான் இந்த தீ விபத்துக்கு காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது.


தீ பிடித்தபோது அந்த சுரங்கத்தில் 71 தொழிலாளர்கள் வேலை பார்த்தனர். அவர்களில் 43 தொழிலாளர்கள் தப்பி விட்டனர். எஞ்சியவர்களில் 25 பேர் தீயில் கருகி இறந்தனர்.

அவர்களின் உடல்கள் கைப்பற்றப்பட்டனர். மீதிப் பேர் என்ன ஆனார்கள் என்பது குறித்து தேடுதல் இடம்பெற்று வருகிறது. (6)

# ரஜினியின் மகள் சௌந்தர்யாவுக்கு திருமணம்

ரஜினியின் இரண்டவாது மகள் சௌந்தர்யாவுக்கு அடுத்த மாதம் திருமணம் நடைபெறவுள்ளது. ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யாவுக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றது. அவர் திரைப்பட நடிகர் தனுஷை மணந்து கொண்டார்.

ரஜினிகாந்தின் இரண்டாவது மகள் சௌந்தர்யா ஆக்கர் ஸ்டுடியோ என்னும் பெயரில் அனிமேஷன் நிறுவனத்தை நடத்தி வருகிறார். ரஜினியை மையமாக கொண்ட சுல்தான் தி வாரியர் என்னும் அனி மேஷன் படத்தையும் அவர் இயக்கி வருகிறார்.



இதனிடையே வெங்கட்பிரபு இயக்கத்தில் கோவா படத்தையும் அவர் தயாரித்து வருகிறார். இந் நிலையில் தனது இரண்டவாது மகள் சௌர்ந்தர்யாவுக்கு திருமணம் செய்ய ரஜினிகாந்த் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகி றது.

கடந்த 2 ஆண்டுகளாக ரஜினிகாந்த் ஷங்கர் இயக்கும் எந்திரன் படத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். படம் முடியவுள்ள நிலையில் அவர் தனது மகள் திருமணத்தை பேசி முடித்திருப்பதாக கூறப்படுகிறது. சென்னையைச்சேர்ந்த பிரபல கட்டுமான நிறுவன அதிபர் ராம்குமார் என்பவரின் மகன் அஸ்வினுக்கும் ரஜினி மகள் சௌந்தர்யாவுக்கும் திருமணம் பேசப் பட்டிருப்பதாக இரு குடும்பத்திற்கும் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சௌந்தர்யா அஸ்வின் திருமணம் அடுத்த மாதம்14ஆம் திகதி நடைபெறலாம் என்று கூறப்படுகிறது. திருமண ஏற்பாடுகள் தீவரமாக நடைபெற்று வருவதாகவும் இந்த சம்பந்தம் இரு தரப்பினருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிகிறது. (2-6)



# தோனி, ஹோலி கௌரவம்; இந்திய அணி அபார வெற்றி

(மிர்பூர்)

தோனி-ஹோலி ஜோடியின் பொறுப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

இலங்கை, பங்களாதேஷ் மற்றும் இந்தியா அணிகள் மோதும் முக்கோண ஒரு நாள் தொடர் பங்களாதேஷில் நடைபெறுகிறது.

இத் தொடரின் மூன்றாவது போட்டியில் நேற்று இந்திய-பங்களாதேஷ் அணிகள் மோதியது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 296 ஓட்டங்களை எடுத்தது.

இதில் இம் ஹைஸ் 70 ஓட்டங்களையும் தமிம் இக்பால் 42 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 60 ஓட்டங்களையும் மமுல்லா ஆட்டமிழக்காமல் 45 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக) 60 ஓட்டங்களையும் ரகீபுல் ஹசன் 32, அஷ்ரபுல் 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நெகரா, சிறிகாந்த், ஹர்ப்பஜன் சிங், யுவராஜ் சிங், மற்றம் ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பத்தில் 8.1 ஓவர்களில் 51 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் 4 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த தோனி-ஹோலி ஜோடியின் சுறுசுறுப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 47.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 297 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் சதம் அடித்த அணித்தலைவர் மகிந்திரசிங் தோனி 107 பந்துகளில் (9 பவுண்டரிகள் அடங்கலாக) 101 ஓட்டங்களையும் சுரேஸ் ரெய்னா 43 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 51 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்ததுடன் விரோட் ஹோலி 102 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 91 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ரசேல், ஹுசைன் மற்றும் சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி 4 புள்ளிகள் பெற்று தொடரில் புள்ளிகள் அடிப்படையில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. முதலாவது இடத்தில் இலங்கை 8 புள்ளிகளுடன் உள்ளது.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு சதம் அடித்து திருப்பு முனை அமைத்த தோனி ஆட்டநாயகனாக தெரிவானார்.

இத் தொடரின் நான்காவது போட்டியில் இன்று இலங்கை-பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றது.

# வேலுப்பிள்ளையின் பூதவுடலை யாழ்ப்பாணம் எடுத்துவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தையார் வேலுப்பிள்ளையின் பூதவுடலை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவர ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

வேலுப்பிள்ளையின் பூதவுடலை சிவாஜிலிங்கத்திடம் ஒப்படைக்க அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அவரது இறுதிக் கிரியைக்களை வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்தில் மேற்கொள்ள உறவினர்கள் விருப்பம் கொண்டுள்ளனர்.

அவரது பூதவுடலை யாழ்ப்பாணம் எடுத்துவர அனுமதி கிடைத்தால் அவரது பூதவுடல் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் இடம் பெறும் என கஜேந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை வேலுப்பிள்ளையின் பூதவுடலை சிவாஜிலிங்கம் எம்.பியிடம் ஒப்படைக்குமாறு அவரது மகள் கூறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## கோடன் வைஸ் வெளியேறினார்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகப் பேச்சாளரை அரசு நாட்டை விட்டு வெளியேற்றிய பின்னர் ஐ.நா. வேறுபேச்சாளரை நியமிக்கவில்லை என தெரிவிக்கின்றது.

இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகளின் சபையின் அலுவலகப் பேச்சாளர் கோடன் வைஸ் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் ஐக்கிய நாடுகள் சபை வேறு பேச்சாளரை நியமிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தற்காலிக அடையாள அட்டை பெற 18 ஆயிரம் பேர் விண்ணப்பிப்பு

## யாழ். அரச அதிபர் க.கணேஷ் தகவல்

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க தற்காலிய அடையாள அட்டையை பெற்றக்கொள்வதற்கு நேற்றுவரை 18 ஆயிரத்து 317 பேர் விண்ணப்பித்துள்ளதாக யாழ். தெரிவத்தாட்சி அலுவலர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதில் நேற்றுவரை ஆயிரத்து 795 பேருக்கு தற்காலிக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத் தும் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை இல்லாதவர்களும் எதிர்வரும் ஜனாதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதியாக தற்காலிக அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

இவ் அடையாள அட்டையை பெறுவதற்காக நேற்றவரை யாழ். மாவட்டத்தில் 18 ஆயிரத்து 317 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதில் நேற்றுவரை ஆயிரத்து 795 பேருக்கு தற்காலிக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. தற்காலிக அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பித்த அனைவரது விண்ணப்பங்களும் பரிசீலித்து விரைவில் அடையாள அட்டையை பெற்றுக்கொடுக்குமாறு பிரதேச செயலாளர் ஊடாக சகல கிராம சேவையாளர்களுக்கும் அறிவித்துள்ளேன்.

எனவே எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் கிடைத்த விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு அடையாள அட்டை வழங்கப்படும் என யாழ். தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

# சட்டம், ஒழுங்கைச் சீர்குலைப்போரை...

கடமையாற்றினால் தான் மக்களுக்கு நீதியான சேவையை வழங்க முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் தியாகத்துடன் கடமையுணர்வுடன் பொதுமக்களுக்குச் செயலாற்ற முன்வரவேண்டும். யாழ்ப்பாணக் குடாநாடு கடந்த காலங்களில் யுத்த சூழலால் பாதிப்படைந்தது.

தற்போது அந்த சூழல் இல்லாமல் சுமுகமான நிலையே காணப்படுகின்றது. மல்லாகம் நீதி நிர்வாக வலயத்தில் 8 பொலிஸ் நிலையங்கள் உள்ளன. இப் பிரதேசத்தில் அதிகளவான மக்கள் மீள்குடியமர்த்தப்படாமல் உள்ளனர்.

நாங்கள் மக்களுக்கு நண்பர்களாக முன்னின்று கடமையாற்ற வேண்டும். யாழ்.குடாநாடெங்கும் குற்றச்செயல்கள், சமூக விரோதச் செயல்கள், கலாசாரச் சீரழிவுகள் பெருமளவு அதிகரித்துக் காணப்படுகின்றன.

இரவில் மக்கள் நிம்மதியாக இருக்கின்ற சூழ்நிலை இல்லை. பகலில் வெளியே செல்பவர்கள் வீடுதிரும்புவார்கள் என்ற நம்பிக்கை உறவினர்கள் மத்தியில் இல்லை. நாங்கள் நீதி ஒழுங்கிற்கு ஏற்ப ஒற்றுமையாகச் செயற்பட்டோமேயானால் குற்றச்செயல்களை இவ் நாட்டில் இருந்து விரட்டி விடலாம்.

நாங்கள் செய்கின்ற சேவைகளை பல்லாயிரக்கணக்கானோர் அவதானித்து வருகின்னர். நாங்கள் யாரிடமிருந்தும் தப்பலாம். மேலேயுள்ள சக்தியிலிருந்து தப்ப முடியாது.

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே மிகவும் அந்நியோன்னியமான உறவு முறை இருக்க வேண்டும். பொலிஸார் கடமையாற்றும் போது தங்கள் முன் வருகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதிலே இன, மத உறவு பாகுபாடு இல்லாமல் நீதியாகச் செய்ய வேண்டும்.

பொலிஸ் நிலையத்திற்குச் சென்றால் தமது பிரச்சினைகளைப் பொலிஸார் தீர்த்து வைப்பார்கள் என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு வரவேண்டும்.

பொலிஸ் குற்றப்பத்திரங்களைச் சிங்களத்தில் சமர்ப்பிக்கின்றனர். அவை பொது மக்களுக்குப் பல சிரமங்களை ஏற்படுத்துகின்றது. குற்றப்பத்திரங்களைக் கூடுதலாகத் தமிழிலும் சமர்ப்பிக்க வேண்டும்.

போக்குவரத்து விதிமுறைகளைப் பொலிஸார் மிகவும் கடுமையாகக் கடைபிடிக்க வேண்டும். தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அதிகமான வாகனங்கள் வருகின்றன.

இதனால் நெருக்கடிகள் ஏற்படுகின்றது. விபத்துக்கள் அதிகமாக ஏற்பட்டு மரணங்கள் இடம்பெறுகின்றன. மல்லாக நீதி நிர்வாக எல்லைக்குட்பட்ட 8 பொலிஸ் நிலையங்களிலும் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு போக்குவரத்து நெருக்கடிகளை நீக்க வேண்டும்.

### மினிவான்கள் மீது சட்ட நடவடிக்கை

அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்லுதல், சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துதல், தேய்ந்த ரயர்களை வாகனங்களில் பொருத்தியிருத்தல், பயணிகளை இடையில் இறக்கி விட்டுச் செல்லுதல், தொலைபேசியில் கதைத்துக் கொண்டு வாகனம் செலுத்துதல், சிக்னல் லைற் இல்லாமல் வாகனத்தைச் செலுத்துதல், அனுபவம் இல்லாதவர்கள் வாகனம் ஓட்டுதல், பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் முடிபுறும் நேரங்களில் அதிகவேகமாக வாகனங்களைச் செலுத்துபவர்கள் ஆகியோர் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது போக்குவரத்துப் பொலிஸார் நாளையில் (இன்று) இருந்து இச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

### புத்தூர் சந்தியில் பொலிஸார் சோதனை நிலையம்

அச்சுவேலிப் பிரதேசத்தில் சட்டவிரோதச் செயல்கள் இடம்பெறுகின்றது. சட்டவிரோதமாக அளவு கடந்த மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. அனுமதிப் பத்திரமின்றி பெருந்தொகையான மரங்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

இவைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். எனவே புத்தூர் சந்தியில் சோதனைச் சாவடி நிலையம் அமைக்கப்பட்டு 24 மணி நேர பொலிஸ் கண்காணிப்பு இடம்பெறவேண்டும்.

### கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகின்றது. கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் சாராயத்தில் கசிப்பு கலப்படமாக்கப்பட்டு வெளிப்படையாக விற்கப்படுகின்றது.

ஊரெழு, சுன்னாகம், இணுவில், உரும்பிராய் ஆகிய பிரதேசங்களில் கசிப்பு அதிகளவாக உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனால் குடும்பங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட்டு மரணங்கள் நிலவுகின்றது.

இளைஞர்களின் தவறான பாதைக்குக் கூட்டிச் செல்கின்றது. இவற்றைக் கட்டுப்படுத்த மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் இணைந்துசெயற்பட வேண்டும்.

கசிப்பு உற்பத்தி செய்பவர்கள் கைது செய்யப்படுகின்றபோது அவர்களிட மிருந்து கைப்பற்றிய அனைத்துப் பொருள்களும் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும்.

### சுகாதார சீர்கேடுகள் குறைக்கப்பட வேண்டும்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் இதுவரைக்கும் சுகாதார சீர்கேடு தொடர்பான எந்த வழக்கும் இல்லை. ஆனால் இப் பகுதியில் சுகாதார சீர்கேடுகள் அதிகளவு இடம்பெற்று மக்கள் நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

சுகாதார பரிசோதகர்கள் சகல உணவுச் சாலைகளையும் கிழமைக்கு ஒருதடவை கண்காணிப்புச் செய்ய வேண்டும். கோயில்கள், சந்தைகளில் விற்கப்படுகின்ற உணவுப் பொருள்களைப் பரிசோதிக்க வேண்டும்.

மருந்துக் கடைகளில் திகதி முடிந்த மருந்து வகைகள் புது லேபிள் ஒட்டி விற்கப்படுகின்றது. போதை மருந்து ஊசிகள் மறைமுகமாக விற்கப்படுகின்றது. யாழ்.மாவட்டம் எங்கும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்திருப்பதால் வீதிகளில் குப்பை கூழங்கள் அற்றதாகக் கவனிக்க வேண்டும்.

பாழடைந்த கிணறுகள், பொதுக் கிணறுகள் என்பவற்றைச் சீர்செய்து தூய்மையாக வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

### சட்டவிரோதக் குழு

ஏ-9 பாதை திறந்ததன் பின்னர் இலங்கையின் கிழக்கு மற்றும் தென்பகுதியிலிருந்து ஓர் கும்பல் யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்கின்றது. இக் கும்பலில் 20 பேர் கொண்ட குழுவொன்று சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுகின்றது.

அவர்கள் ஒவ்வொருவரும் யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபல்யமான ஆலயத் திருவிழாக்களின்போது வருகை தந்து பொதுமக்களின் தங்க நகை ஆபரணங்களை அபகரிக்கின்றனர்.

இப்படியான செயலில் ஈடுபடுகின்றவர்கள் இங்கு வீடுகளை வாடகைக்குப் பெற்றுக் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான நிலையில் எவர் இருந்தாலும் அவ்வவ் பிரதேசங்களைச் சேர்ந்த கிராம சேவையர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்க வேண்டும்.

### நீலப் படங்கள் பார்த்தால் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாண மாவட்டம் கலாசாரத்தால் மிகுந்த இடம். யாழ்ப்பாணக் கலாசாரத்தைச் சீரழிக்கின்ற நீலப் படங்கள் குடாநாடு எங்கும் உலா வருகின்றன.

வீடியோ சென்றர்கள், நெற்கபே மூலம் இவ் நீலப்படங்கள் இளைஞர்கள் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகித்து கலாசாரத்தைச் சீர்குலைக்கின்றனர்.

எனவே பிரதேச செயலர்கள் இவ் கலாசாரச் சீரழிவுகளுக்கு இடமளிக்கக் கூடாது. பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கலாசார உத்தியோகத்தர்களை வீடியோ சென்றர்கள், நெற்கபேகளைச் சோதனையிட்டுக் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-7)

...நகர சபை, யாழ்ப்பாணம்.



# ஐ.நாவின் கடிதத்திற்குப் பதிலளிக்க கால அவகாசம் கோருகிறது அரசு

ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்ரன் அனுப்பியிருந்த கடிதத்துக்கு அரசாங்கம் பதில் அனுப்பியிருப்பதாக வெளி விவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்தார்.

எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சரத் பொன்சேகா கூறியிருந்த கருத்துகளுக்கு விளக்கம் அளிக்குமாறு நீதிக்குப் புறம்பானதும் தன்னிச்சையானதுமான மரண தண்டனை விவகாரத்தைக் கையாளும் ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்ரன் அரசிடம் விளக்கம் கோரியிருந்தார்.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருப்பதாவது,

பிலிப் அல்ஸ்ரன் கடிதத்துக்குப் பதில் அளிப்பதாக அரசாங்கம் சிறப்பு குழுவொன்றை நியமித்திருப்பதாகவும் கடிதத்தின் உள்ளடக்கத்தை நாம் ஆராய்ந்து வருவதாகவும் இந்தக் கடிதத்தில் அவருக்கு விளக்கியுள்ளோம்.

அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை விசாரிப்பதற்குச் சிறப்புக் குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது என்பதையும் அவருக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

பொன்சேகாவின் அறிக்கை அரசுக்குத் தொடர்ச்சியான சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

எனவே சிறப்பு அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்ரனின் கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுக்குப் பதிலளிக்க அதிகாரிகளுக்கு அதிக காலம் தேவைப்படுகிறது.

இந்தக் கடிதம் அரசுக்கும் மக்களுக்கும் அடையாளம் வெளிப்படுத்தப்பட சில படை அதிகாரிகளுக்கும் அதிகளவிலான மறைமுகத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார். (ச-5)

# சாராம்ச அறிக்கை ஐ.நாவிடம் கையளிப்பு

(கொழும்பு)

தமிழ் இளைஞர்களை இலங்கைப் படையினர் படுகொலை செய்வது தொடர்பாக வெளியான சனல்-4 வீடியோக் காட்சி தொடர்பான சாராம்ச அறிக்கை நேற்று ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்பட்டது.

இச் சாராம்ச அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதை மற்றும் சட்டவிரோத கொலைகளுக்கு எதிரான பிரிவின் பிரதிநிதி பிலிப் அல்சன் சமர்ப்பித்தார். இவ் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது விஷேட விளக்கமளிப்பும் இடம்பெறவுள்ளது.

குறிப்பிட்ட சனல்-4 வீடியோக் காட்சியில் இலங்கை இராணுவம் தமிழ் இளைஞர்களை படுகொலை செய்வது தொடர்பில் இலங்கை அரசு மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-3,5)


BARATHY
சித்தன்கேணி
தரம் 5 முதல் 11 வரை
புதிய வகுப்புகள்
பிரிவு-II
ஆரம்பம்:-09.01.2010 சனி
Note:-
- பிரிவு-I க்கு மாணவர் தொகை அதிகரித்துள்ளதால் அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளது.
- இதுவரை அனுமதி பெறாத மாணவர்கள் உங்கள் அனுமதிகளை தாமதியாது பிரிவு-IIக்கு நாளையில் இருந்து பெற்றுக்கொள்ளவும்.
- தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு (புதன், சனி, ஞாயிறு) நடைபெறுகின்றன.
- உங்கள் பிரபல்யம் பெற்ற ஆசிரியர்களினால்
- பெற்றோர் தொடர்புகளுக்கு
-பொறுப்பாசிரியர்கள்-
N.தேவா, N.T.தரன்
(C-4159)


## இராணுவத்தின் வழித்...

கொண்டு வந்தன.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகள் தேக்கவத்தையிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் சோதனைகளின் பின்னர் பேருந்துகளில் ஏறி இராணுவ வழித்துணையுடன் பிரயாணத்தை மேற்கொண்டு வந்தார்கள்.

இப்போது இந்த நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. பேருந்துகள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பேருந்து நிலையங்களிலிருந்து நேரடியாகத் தமது பிரயாணத்தை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளன.

இதன் காரணமாக வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் பஸ்களில் ஏறி நீண்ட நேரத்திற்குக் காத்திருக்க வேண்டிய தில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ச-3)

## பண்ணை வீதி புனரமைப்பு...

கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.-தீவகம் பண்ணை வீதி, பண்ணைச் சந்தியிலிருந்து ஒரு கிலோமீற்றர் வீதி அகலமாக்கப்பட்டு திருத்துவதற்கான பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

இவ் வீதியைத் திருத்துவதற்குரிய கற்களைப் பறிப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்து தரப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கமைய யாழ்.பிரதேச செயலாளரின் ஊடாக பண்ணையில் இடமொன்று வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் திருத்தப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டது. இதற்கமைய வீதியின் முதல் ஒரு கிலோமீற்றர் புனரமைப்புப் பணிகள் அடுத்த திங்கட்கிழமை ஆரம்பமாகும் என ஒப்பந்தகாரர் உறுதியளித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை நேற்று அறிவித்துள்ளது என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

## மட்டக்களப்பு...

களப்பு நகரசபை முதல்வர் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து வந்தார்.

ஆனால் தற்போது அவர் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அறிவித்தலை அவர் விரைவில் வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## யாழ்...

சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இவ் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இதேவேளை சரணடைந்த முன்னாள் போராளிகளை விடுதலை செய்யும் அரசு,தம்மை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதிகளில் 23 ஆண்களும் 2 பெண்களும் உள்ளனர். (ச-30)

## விடுதலைப்புலிகளின் தலைவர்...

பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்ததாவது,

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்தார்.

அவரது வேண்டுகோளின்படி அவரது மனைவிக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வந்தது. அவர்கள் பனாகொடை கந்தோமின் பகுதிக்கு உள்ளே இருந்தார்கள்.

அவர் வாதநோயால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார். கடந்த ஒரு மாதத்திற்கு மேலாகக் கொழும்பு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அவரது நோய் காரணமாக நேற்று முன் தினம் இரவு அவர் மரணம் அடைந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கொழும்பு மருத்துவமனை அவரது மரணத்துக்கான காரணத்தை வெளியிட்டுள்ளதா என்று கேட்டபோது பதிலளித்துள்ள அவர், பலவிதமான உடல் நலக் குறைவுகளினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு இதய நோய் இருந்தது. சக்கர நோயினாலும் அவர் பாதிக்கப்பட்டிருந்தார். எனினும் அவரது மரணத்திற்கான காரணம் இதுவரை எமக்குத் தெரிவிக்கப்படவில்லை.

அவரது உடலை மருத்துவர்கள் பரிசோதித்தபிறகு அவரது மரணத்திற்கான காரணம் தெரிய வரும் என்று கருதுகின்றேன். அதிகாரபூர்வ காரணம் என்றால் அவர் 86 வயதானவர். பல விதமான உடல் நலக் குறைபாடுகளைக் கொண்டவர். எனவே இயற்கை காரணங்களால் அவரது மரணம் ஏற்பட்டிருக்கின்றது என்று கூறினார் இராணுவப் பேச்சாளர்.

அவரது இறுதிக் கிரியைகள் தொடர்பாகத் தற்போதைய நிலை என்னவென்றும் அவரது இறுதிக் கிரியைகளை நிறைவேற்றும் முகமாக உடலை யாராவது கோரியுள்ளார்களா என்றும் கேட்டபோது பதிலளித்த அவர்,

அவரது மனைவி தற்போது அங்கே தான் இருக்கின்றார். அவரின் விருப்பத்தின்படி இறுதிக் கிரியைகள் இடம்பெறும். அவரது இரு மகள்களோ அல்லது மகனோ அவரது உடலைக் கோரினால் அவர்களது விருப்பப்படி நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

அப்படியானால் அவரது பிள்ளைகள் தாங்கள் இருக்கும் நாடுகளுக்கு தமது தந்தையின் உடலை எடுத்துச் செல்ல விரும்பினால் அதற்குண்டான நடவடிக்கையை இலங்கை இராணுவமோ அல்லது அரசோ எடுக்குமோ எனக் கேட்டதற்கு,

அது குறித்து நான் எதுவும் கருத்துக் கூற முடியாது. இது தொடர்பில் அரசு என்ன முடிவு எடுக்கும் என்றும் எனக்குத் தெரியாது. ஆனால் இதுவரை அப்படியான வேண்டுகோள்கள் எவையும் வரவில்லை என்றும் தெரிவித்தார்.

மறைந்த பிரபாகரனின் தந்தையின் உடலை இறுதிக் கிரியைகளுக்காக இலங்கையின் வட பகுதிக்கு எடுத்துச் செல்லும் வகையில் அங்கிருக்கும் ஒரு தமிழ் அரசியல் தலைவரிடம் ஒப்படைக்குமாறு கோரி கனடாவில் இருக்கும் பிரபாகரனின் சகோதரியை மேற்கோள் காட்டி ஊடகங்களில் செய்தி வந்துள்ளது. அப்படியான கோரிக்கை உங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதா என்றும் தற்போது இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபாகரன் அவர்களின் தாயாரை விடுவிப்பது தொடர்பாக ஏதாவது முடிவு எடுக்கப்பட்டுள்ளதா என்றும் கேட்டபோது பதிலளித்த அவர்,

அவரது உடலை வட பகுதிக்கு எடுத்துச் செல்லக் கோரும் அப்படியான கோரிக்கைகள் எதுவும் எங்களுக்கு வரவில்லை. இந்த இடத்தில் நான் உங்களுக்கு ஒரு விடயத்தை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அதாவது அவர்கள் இராணுவத்தினால் தடுத்து வைக்கப்படவில்லை. அவர்களின் வேண்டுகோளின்படி அவர்கள் இராணுவப் பாதுகாப்பில் இருந்தார்கள்.

எனவே அவர் தொடர்ந்து இராணுவத்தின் பாதுகாப்பில் இருப்பார். அவர் தன்னை விடுவிக்க வேண்டும் என்று கோரினால் அது குறித்த முடிவை எடுக்க வேண்டியது அரசுதான்.

இராணுவ மட்டத்தில் அல்ல. மனிதாபிமான அடிப்படையில் அரசு அதில் முடிவெடுக்கும். இதில் இராணுவத்தினர் தலையிடுவதற்கு ஒன்றுமில்லை என்று தெரிவித்தார். (ச-3,5)

## 12, 13 ஆம்...

யாழ்.மாவட்டத்தில் 137 இடங்களில் நடைபெறவுள்ள வாக்களிப்பு நிலையங்களில் தெரிவு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களினால் அந்தந்தப் பகுதிகளில் உள்ள உத்தியோகத்தர்கள் வாக்களிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்களிப்பை கண்காணிப்பதற்குரிய முகவர்கள் நியமிப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அந்தந்த அதிகாரமளிக்கப்பட்ட கட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை பார்வையிடுவதற்கென உதவி தெரிவு அத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-3,5)

## ஜனநாயகத்தை மீளக்கட்டி...

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் விஞ்ஞாபனம் நம்பிக்கை மிக்க மாற்றம் என்ற தொனிப்பொருளில் பத்துப் பிரதான அம்சங்களை உள்ளடக்கியதாக நேற்று முற்பகல் கொழும்பு இன்டர் கொன்டினெண்டல் ஹோட்டலில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரமுகர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனநாயகத்தை மீளக்கட்டியெழுப்பி சமாதானத்தை முறையாகப் பேணல், ஊழல், விரயங்களை முற்றாக இல்லாதொழித்தல், நெருக்கமான உறவுகளைப் பேணி அனைத்துக் குடும்பங்களுக்கும் தேவையானவற்றைச் செய்தல்,

வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், நாட்டின் ஒற்றுமையைக் கட்டி எழுப்புதல், சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல், பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் கௌரவமான நிலைமையை தோற்றுவித்தல்,

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், காத்திரமானதும் வினைத்திறன் மிக்கதுமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அடித்தளம் அமைத்தல், நாட்டின் தேசிய பாதுகாப்பை நிலைநிறுத்தல்.

மேற்கண்ட பத்து அம்சங்களையும் அவற்றுக்கான விளக்கங்களையும் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளதுடன் ஜனாதிபதியாகத் தாம் தெரிவு செய்யப்பட்டால் நாட்டில் துரித மாற்றத்தை ஏற்படுத்த மேற்கொள்ளவுள்ள 7 படிமுறைகள் குறித்தும் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (ச-5)


பிரிவு-I
ஆரம்பித்துவிட்டோம்
A/L-2012
கலை, வர்த்தகப்பிரிவு
பிரிவு-II
ஜனவரி-9இல்
நேரம் 8.00 A.M
பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-4154)

NEC
Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
A/L 2012
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்
09-01-2010
சனி காலை 8.00 மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தரம் 5 நாவலர் வெளியீடு
1 வது பரீட்சை
புலமைப் பரிசில் 2010
ஆரம்பம்
09-01-2010
சனிக்கிழமை
பரீட்சை நேரங்கள்
காலை: 08.00Am, 09.00Am, 10.00Am
மாலை: 02.00Pm, 03.00Pm, 04.00Pm
நாவலர் இன்ஸ்ரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

நாவலர் வெளியீடு
அறிவொளி
மாணவர்களின் அறிவை மேம்படுத்தும் நோக்கில் தொடர் பரீட்சை
தரம் 1,2,3,4,5
தமிழ்
கணிதம்
ஆங்கிலம்
சுற்றாடல்
சமயம்
மாணவர்களுக்கானது.
(மாதத்தில் இருமுறை)
1வது பரீட்சை
இம்மாதம் 9ம்,10ம் திகதிகளில்
நாவலர் இன்ஸ்ரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.